# ஜனோபகாரி.

## (JANOPAKARI)

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலாதார்."—திருக்குறள்.

புஸ்தகம் 3. Vol. III. | காளயுக்தி௵ ஐப்பசி௴, OCTOBER, 1918. | சஞ்சிகை 10. No. 10.

## The Progress of the World.

### பிரபஞ்சப்போக்கு.

**சென்னை இராஜதானியில் வியவசாய அபிவிருத்தி.**

சென்னை இராஜதானியில் வியவசாய அபிவிருத்தி விஷயமாய் அந்த இலாகாவால் 1917–18-ம் வருஷத்தில் செய்யப்பட்டிருக்கிற வேலைகளின் விவரங்களடங்கிய ஒரு ரிபோர்டு இப்போது வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றது. நமது இராஜதானியில் பெரும்பான்மையோர் வியவசாயத்தையே தொழிலாகக் கொண்டுள்ளபடியால், பிரஸ்தாப ரிபோர்டில் கண்டுள்ள சில முக்கிய அம்சங்களை இங்குக் குறிப்பிடுவது அவசியமாகும்.

யுத்தத்திற்குமுன்பு நமக்குத் தேவையான சாயவகைகள் மேனாடுகளினின்றே வந்துகொண்டிருந்தன. கப்பற் போக்குவரத்துகள் நின்றுவிட்டதன் காரணமாக அவை வாராதனால், அவுரிச்சாயத்தைப் பரீக்ஷித்து ரிபோர்ட் செய்யும்படி மிஸ்டர் மார்ஸ்டன் என்பவர் நியமிக்கப்பட்டார். இவர் இந்தியாவில் அவுரிப் பயிர் செய்யப்படும் பற்பல இடங்களை நேரிற் சென்று பார்த்து, அங்கு அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் நமது இராஜதானியில் அனுஷ்டிக்கப்படும் முறைகளையும் கவனித்து, இவை இரண்டுக்குமுள்ள வித்தியாசங்களையும் இத்தொழிலை அபிவிருத்தி செய்வதற்கான முறைகளையும் குறிப்பிட்டு ஓர் ரிபோர்டு அனுப்பியிருக்கிறார். இது நமது இராஜதானி வியவசாயிகள் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாகும்.

சாஸ்திரீயாகப் பயிர்களைச் சாகுபடி செய்து, அதனால் உண்டாகும் நன்மைகளை வியவசாயிகளுக்குக் காட்டும்பொருட்டுச் சில முயற்சிகள் செய்யப்பட்டு வருகின்றனவென்று ரிபோர்ட்டினால் அறியப்படுகின்றது. அவற்றுள் சிலவற்றை இங்குக் குறிப்பிடுவது பொருந்தும். வியவசாய இலாகா அதிகாரிகள் மேற்குச் சமுத்திரக்கரைப் பக்கத்தில் நான்கு தென்னந்தோப்புக்களைத் தங்கள் ஆதீனத்திற் குட்படுத்திக்கொண்டு, அங்குச் சில சாஸ்திர முறைகளை அனுஷ்டித்து அதன் பலாபலன்களைக் கவனித்துவருகிறார்கள். இம்முறையானது இப்போது புதிதாகக் கையாளப்படுகின்றது. உருளைக்கிழங்கு சாகுபடி செய்வதற்கான சிறந்த விதைகளை வியவசாயிகளுக்கு உதவவேண்டி, அதற்காக அந்த சாகுபடிக்கு நல்ல வசதியாயுள்ள நீலகிரி ஜில்லாவில் 83 ஏக்கர்

79 ஸெண்டு நிலம் கொள்ளப்பட்டு ஒரு வியவசாயப்பண்ணை ஏற்படுத்தப்பட்டிருக்கின்றது. நன்செய் நிலங்களில் கரும்புசாகுபடி செய்வதன் பலனைக்கண்டறிய கோயமுத்தூர் ஜில்லாவில் 6 ஏக்கர் சொச்சம் நிலம் வாங்கப்பட்டு அங்கு ஒரு வியவசாயப்பண்ணை ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. குடியாத்தத்துக்கு அருகில் ஒரு வியவசாயப் பண்ணையை ஸ்தாபிப்பதற்காக வியவசாய இலாகாதார் 17 ஏக்கர் 71 ஸெண்டுநிலம் குத்தகைக்குவாங்கியுள்ளார்கள். நிலக்கடலை விஷயமாய்ப் பரீக்ஷை செய்யவும்; பாளூர் பண்ணைக்குச் சமீபத்தில் 13 ஏக்கர் 70 ஸெண்டு நிலம் குத்தகைக்கு ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றது. இன்னும், பருத்தி சாகுபடி விஷயமாயும், நெல் சாகுபடி விஷயமாயும் குறிக்கப்பட்டுள்ள விஷயங்கள் கவனிக்கத்தக்கன.

வியவசாய காலெஜ் விஷயமாய் குறிக்கப்பட்டுள்ள இரண்டொரு விஷயங்களை இங்குக் குறிப்பிடவேண்டும்: சென்ற வருஷத்தில் இக்கலாசாலையில் சேருவதற்காக விண்ணப்பம்செய்துகொண்டவர்கள் 205 பேர்கள். அவர்களுள் கலாசாலையில் சேருவதற்காகச் செய்யப்படும் பரீக்ஷைக்கு 105 பேர்களே தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். இவர்கள் பரீக்ஷிக்கப்பட்டு முடிவில் 42 பேர்களே கலாசாலையில் படிக்க அருகர்களென்று குறிப்பிடப்பட்டார்கள். இவர்களிலும் 9 பேர்கள் விலகிக்கொண்டுவிட்டபடியால், மிகச் சிலரே வியவசாயக்கல்வி பெறவேண்டியதாயிற்று. 100-க்கு 70 பேர் வியவசாயிகளாயுள்ள நமது இராஜதானியில், மிகவும் கொஞ்சம் பேர்களே வியவசாயக் கல்வி கற்க முன்வந்திருப்பது வியசனிக்கத்தக்க விஷயமாகும். பொது ஜனங்களுக்குள் வியவசாயக் கல்விவிஷயமாய் ஊக்கமில்லாமலிருப்பதற்குக் காரணமென்ன? வியவசாயத்தையே நம்பியிருக்கும் நம்மவர்களுக்கு வியவசாயக்கல்வி விஷயமாய்ப் போதியவளவு சிரத்தை இல்லாமலிருப்பது ஆச்சரியமே. இது சம்பந்தமாய் வியவசாய இலாகா அதிகாரிகள் செய்துவரும் முயற்சியானது குறைவென்றே புலப்படுகின்றது. வியவசாயக் கல்வியின் அவசியத்தைப் பொது ஜனங்களுக்கு நன்கு எடுத்துக்காட்டி, பிரதி வருஷமும் அதிகமான மாணவர்களை இக்கல்வியைப் பயில வியவசாய இலாகா தூண்டவேண்டும்.

**சென்னையில் கால்நடைகள்.**

இந்தியாவில் மற்ற பாகங்களைக்காட்டிலும் சென்னை இராஜதானியில் வியவசாயமே முக்கிய தொழிலாக இருக்கின்றது. வியவசாயத்தை நன்கு நடத்துவதற்குக் கால்நடைகளே முக்கிய கருவிகளாயிருக்கின்றன. நமது இராஜதானியில் கால்நடைகளின் நிலைமையைப் பற்றிப் பலதுறைகளிலும் ஆராய்ந்து பார்த்தால், அவை திருப்திகரமாக இல்லையென்றே புலப்படும். முக்கியமாக இவ்விராஜதானியில் வியவசாயத்துக்குத் தேவையான கால்நடைகள் இருக்கின்றனவாவென்ற விஷயம் கவனிக்கப்படவேண்டும். 1909–10-ம் வருஷத்தில் இங்கு மொத்தம் சாகுபடியான விஸ்தீர்ணம் 36,687,000 ஏக்கர். இந்த விஸ்தீர்ணத்தைச் சாகுபடி செய்வதற்கு 3,701,693 ஜதை காளைகளும் எருமைகளுமே இருந்திருக்கின்றன. அதாவது சராசரியில் 10 ஏக்கர் நிலம் சாகுபடி செய்வதற்கு ஒரு ஜதை மாடுகளே ஆகின்றன. ஒரு ஜதை மாடுகளைக்கொண்டு 10 ஏக்கர் நிலத்தை எங்ஙனம் சாகுபடி செய்ய இயலும்? மாடுகள் மிகவும் திடமாயிருப்பினும், ஆறு அல்லது ஏழு ஏக்கர்களுக்குமேல் சாகுபடி செய்ய இயலாதென்பதே நமது அபிப்பிராயம். ஆகவே, சாகுபடி செய்யப்படும் விஸ்தீர்ணத்திற்குத் தக்கபடி கால்நடைகள் இல்லையென்றே மேற்கண்ட கணக்கால் அறியலாம்.

நமது இராஜதானி வியவசாயத்தையே நம்பியிருப்பதனால், வியவசாய இலாகா அதிகாரிகள் கால்நடைகளின் சங்கியை அதிகப்படுத்தும் விஷயத்திலும், சிறந்த கால்நடைகளை உற்பத்தி செய்யும் விஷயத்திலும் வியவசாயிகளைக் கலந்துகொண்டு தக்கது செய்வார்களென எதிர்பார்க்கப்படுகின்றது.

*துஷ்ட மிருகங்களினாலும், பாம்புகளினாலும் ஏற்பட்ட ஜனச்சேதம்.*

ஒவ்வொரு மாகாணத்திலும் துஷ்ட மிருகங்களினாலும்பாம்புகளினாலும் கொல்லப்பட்டவர்களின் கணக்குக்கள் இந்தியா கவர்ன்மெண்டு கெஜட்டில் பிரசுரமாயிருக்கின்றன. அதன்படி 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் ஏற்பட்ட ஜனச்சேத விவரங்களைக்கீழேகுறிப்பிடுவோம்.

துஷ்ட மிருகங்களினால் கொல்லப்பட்டவர்கள்.

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 308 | 568 |
| பம்பாய் | ... | 20 | 34 |
| வங்காளம் | ... | 293 | 341 |
| ஐக்கிய மாகாணங்கள் | ... | 137 | 166 |
| பஞ்சாப் | ... | 10 | 24 |
| பர்மா | ... | 59 | 81 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 546 | 655 |
| அஸ்ஸாம் | ... | 102 | 138 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 125 | 158 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 2 | 6 |

மேற்குறித்த கணக்கைக் கவனித்தால், 1913-ம் வருஷத்தைவிட 1917-ம் வருஷத்தில் அதிக ஜனச்சேதம் ஏற்பட்டிருப்பது விளங்கும். இதற்குக் காரணமென்ன? ஜனங்கள் நாளுக்குநாள் தைரியம் குன்றி இந்த துஷ்ட மிருகங்களினால் கொல்லப்படுகிறார்களா? அல்லது இந்த ஜந்துக்களுக்கு நாளாவட்டத்தில் பலம் அதிகரித்து ஜனச்சேதத்தை விளைவிக்கின்றனவா? ஊன்றிக் கவனித்தால், இந்த துஷ்டமிருகங்களிடமிருந்து தப்பித்துக்கொள்ள ஜனங்களுக்குப் போதியவளவு ஆயுதங்கள் இல்லாமையேயென்பது நன்கு புலப்படும். ஒவ்வொரு மாகாணத்திலும் 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் பாம்புகளினால் கொல்லப்பட்டவர்களின் கணக்குக்கள் வருமாறு:—

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 1695 | 1452 |
| பம்பாய் | ... | 1406 | 1527 |
| வங்காளம் | ... | 4491 | 4393 |
| ஐக்ய மாகாணங்கள் | ... | 5166 | 6481 |
| பஞ்சாப் | ... | 899 | 957 |
| பர்மா | ... | 1044 | 1873 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 1940 | 5885 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 1155 | 1524 |
| அஸ்ஸாம் | ... | 167 | 151 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 29 | 25 |

மனிதர்களால் கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்ளும், பாம்புகளும்.

| | கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்கள். | | கொல்லப்பட்ட பாம்புகள். | |
|---|---|---|---|---|
| மாகாணம். | 1913. | 1917. | 1913. | 1917. |
| சென்னை | 2238 | 1898 | ....... | ....... |
| பம்பாய் | 3471 | 2937 | 37396 | 25035 |
| வங்காளம் | 2858 | 412 | 17134 | 1205 |
| ஐக்ய மாகாணங்கள் | 2659 | 2640 | 5310 | 4999 |
| பஞ்சாப் | 3080 | 492 | 3080 | 15026 |
| பீகார், ஒரிஸ்ஸா | 1550 | 1046 | 16784 | 9171 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | 1902 | 1564 | 1265 | 728 |
| பர்மா | 5311 | 5873 | 16222 | 16398 |
| அஸ்ஸாம் | 1988 | 1490 | 1981 | 322 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | 90 | 44 | 595 | 396 |

மேலே குறிக்கப்பட்டுள்ள கணக்கைக் கவனித்தால், 1913-ம் வருஷத்தில் மனிதர்களால் கொல்லப்பட்ட துஷ்ட மிருகங்களையும், பாம்புகளையும் காட்டிலும், 1917-ம் வருஷத்தில் கொல்லப்பட்டவைகள் மிகக் குறைவென்றே புலப்படும். ஆகையால், துஷ்ட மிருகங்களும் பாம்புகளும் முன்னைக்காட்டிலும் அதிகமான ஜனச்சேதத்தைஉண்டாக்குகின்றனவேயன்றி, மனிதர்கள் அவற்றைக்கொல்லும் எண்ணிக்

கைக் குறைந்தே வருகின்ற விஷயம் வியசனிக்கத்தக்கது.

ஆயுத லைஸென்ஸ்களின் விவரம்.

கீழே குறிக்கப்படும் மாகாணங்களில் 1913-ம் வருஷத்திலும், 1917-ம் வருஷத்திலும் எவ்வளவு ஆயுத லைஸென்ஸ்கள் அமுலிலிருந்தனவென்ற விஷயம் வருமாறு :—

| மாகாணம். | 1913. | 1917. |
|---|---|---|
| சென்னை | 47,511 | 45,509 |
| பம்பாய் | 15,231 | 13,563 |
| வங்காளம் | 26,961 | 8042 |
| ஐக்ய மாகாணங்கள் | 22,952 | 6357 |
| பஞ்சாப் | 13,876 | 6219 |
| பர்மா | 7390 | 8051 |
| பீகார், ஒரிஸ்ஸா | 12,799 | 11,247 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | 16,070 | 15,511 |
| அஸ்ஸாம் | 13,046 | 13,114 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | 5517 | 7717 |

மேற்கண்ட புள்ளி விவரப்படி அநேக மாகாணங்களில் 1913-ம் வருஷத்தில் அமுலிலிருந்த லைஸென்ஸ்களின் எண்ணிக்கையைக் காட்டிலும், 1917-ம் வருஷத்தில் அவை குறைந்து போயிருக்கின்றன. முக்கியமாக ஐக்ய மாகாணங்கள், வங்காளம், பஞ்சாப் இம்மாகாணங்களைக் கவனித்தால் உண்மை விளங்கும். ஏன் இவ்விதம் ஆயுதங்கள் குறைக்கப்பட்டனவென்பதன் காரணம் புலப்படவில்லை. சென்ற 1913-ம் வருஷம் முதல் 1917-ம் வருஷம் வரை ஒவ்வொரு வருஷத்திலும் எவ்வளவு ஆயுத லைஸென்ஸ்கள் அமுலிலிருந்தனவென்பது கீழே குறிக்கப்படும் புள்ளிகளால் விளங்கும்.

| | | | |
|---|---|---|---|
| 1913 | ... | ... | 1,82,412 |
| 1914 | ... | ... | 1,76,779 |
| 1915 | ... | ... | 1,67,242 |
| 1916 | ... | ... | 1,37,183 |
| 1917 | ... | ... | 1,36,707 |

ஒவ்வொரு மாகாணத்திலும் 1913-ம் வருஷத்திலும் 1917-ம் வருஷத்திலும் ஆயுதந்தரிக்க எவ்வளவு லைஸென்ஸ்கள் புதிதாகக்கொடுக்கப்பட்டனவென்பதைக் கவனிப்போம்.

| மாகாணம். | | 1913. | 1917. |
|---|---|---|---|
| சென்னை | ... | 3096 | 4302 |
| பம்பாய் | ... | 2727 | 1888 |
| வங்காளம் | ... | 3230 | 392 |
| ஐக்ய மாகாணங்கள் | ... | 3162 | 594 |
| பஞ்சாப் | ... | 1636 | 1279 |
| பர்மா | ... | 1330 | 1201 |
| பீகார், ஒரிஸ்ஸா | ... | 753 | 531 |
| மத்திய மாகாணங்கள், பீரார் | ... | 7613 | 4903 |
| அஸ்ஸாம் | ... | 216 | 305 |
| வடமேற்கு எல்லை மாகாணங்கள் | ... | 1805 | 3625 |

வங்காளத்திலும் ஐக்யமாகாணத்திலும் புதிதாக லைஸென்ஸ் கொடுப்பதானது 1913-ம் வருஷத்தைக் காட்டிலும் 1917-ம் வருஷத்தில் மிகவும் குறைக்கப்பட்டுள்ளது வியசனிக்கத்தக்கது. தேச முழுமைக்கும் 1913-ம் வருஷம் முதல் 1917-ம் வருஷம் வரை ஒவ்வொரு வருஷத்திலும் புதிதாக எவ்வளவு லைஸென்ஸ்கள் கொடுக்கப்பட்டுள்ளனவென்று கவனித்தால், ஒரு வருஷம் தவிர மற்றவைகளில் குறைந்தேயுள்ளனவென்பது புலப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1913 | ... | ... | 25,627 |
| 1914 | ... | ... | 23,016 |
| 1915 | ... | ... | 19,975 |
| 1916 | ... | ... | 20,577 |
| 1917 | ... | ... | 19,316 |

லைஸென்ஸ்கள் எவ்வளவுக்கெவ்வளவு குறைக்கப்படுகின்றனவோ, அவ்வளவுக்கவ்வளவு துஷ்ட மிருகங்களினாலும், பாம்புகளினாலும் ஜனச்சேதம் அதிகப்படுமென்பதில் ஐயமில்லை.

சென்ற 1911-ம் வருஷத்து ஸென்ஸஸ் கணக்குப்படி பிரிட்டிஷாரின் ஆக்ஷிக்குட்பட்ட இந்

தியப் பிரதேசங்களின் மொத்த விஸ்தீர்ணம் 1,093,074 சதுர மைல். இதற்கு 1917-ம் வருஷத்தில் 136,707 லைஸென்ஸ்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அதாவது 8 சதுர மைலுக்கு ஒரு லைஸென்ஸ் வீதம் ஆகின்றது.

பிரிட்டிஷ் இந்தியாவின் மொத்த ஜனத்தொகை $24\frac{1}{2}$ கோடியாகும் இவ்வளவு பெருத்த ஜனத்தொகைக்கு 136,707 லைஸென்ஸ்களை கொடுக்கப்பட்டிருப்பதானது 1786 பேர்களுக்கு ஒன்றுவீதம் ஆகின்றது. இந்தியாவில் நகரங்களும், கிராமங்களும் சேர்ந்து மொத்தம் 5,84 322 இருக்கின்றன. இவற்றில் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டுள்ள கணக்கானது 4 கிராமங்களுக்கு ஒனறுவீதம் தேறுகின்றது.

**ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகள்.**

ஆயுர்வேத யூனானி வைத்திய முறைகளைப் பற்றிச் சென்னை கவர்ன்மெண்டாரின் அபிப்பிராயத்தையும், அம்முறைகளின் உயர்வையும்பற்றிச் சென்ற இரண்டு சஞ்சிகைகளில் எழுதியிருக்கிறோம். ஆயுர்வேத யூனானி முறைகளைப்பற்றிச் சென்னைக் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் தப்பபிப்ராயத்தைக் கண்டிக்கும்பொருட்டு இந்த மாதம் 23-ந் தேதி விக்டோரியா ஹாலில் ஒரு பொது ஜனக்கூட்டம் கூடியது அப்போது திவான் பஹதூர் கே. கிருஷ்ணசாமி ராவ், ஸி. ஐ. இ. அக்கிராஸனம் வகித்தார். அக்கிராஸனாதிபதி தமது ஆரம்பப் பிரசங்கத்தில் சுதேச வைத்திய முறைகளின் விஷயமாய்க் கவர்ன்மெண்டார் கொண்டிருக்கும் அபிப்பிராயத்தைக் கண்டித்துவிட்டு, அம்முறைகளின் விஷயமாப்ப் பேசியவற்றுள் இரண்டொரு அம்சங்களை இங்குக் குறிப்பிடுவோம்.

"நம்முடைய சரீரத்துக்கு நம்முடைய தேசத்து மருந்துதான் ஏற்றது வைத்திய சாஸ்திரமானது அனுபவத்தினால் ஏற்பட்டது. இந்த அனுபவமானது ஒவ்வொரு தேசத்திலும் சீதோஷ்ண ஸ்திதிக்குத் தக்கவாறு மாறுபடும். அது பழக்கவழக்கங்கள், மருந்து மூலிகைகள், உணவுப்பொருள்கள் முதலியவைவற்றைப் பொருந்தியது.

ஐரோப்பிய முறை மிகவும் விலையுயர்ந்தது. வைத்திய நிபுணர்களின் சம்பளமும் மருந்துகளின் விலைகளும் அளவுக்கு மிஞ்சினவை. ஆகையால், நம்முடைய முறைகளை நாம் அபிவிருத்தி செய்யவேண்டியது நமது கடமையாகும். எல்லோரும் இவ்விஷயத்தில் ஒற்றுமையுடன் உழைக்கவேண்டும்."

அக்கிராஸனாதிபதி கூறிய மேற்கண்ட வார்த்தைகள் கவனிக்கத்தக்கன. மிகவும் ஏழ்மையாயுள்ள 'இத்தேசத்தில் அளவுக்கு மிஞ்சின விலைகளையுடைய முறை என்ன நன்மை செய்யக்கூடும்? ஆகவே, பெரும்பாலான ஜனங்களுக்கு அதிகமாக 'உபயோகப்பட்டு வரும் இந்த சுதேசமுறைகளை இராஜாங்கத்தார் ஆதரிக்கவேண்டுமென்பதை நாம் பன்முறையும் வற்புறுத்துவோம்.

---

## Price and Trade Control in Ancient India.

## பூர்விக இந்தியாவில் விலையையும், வியாபாரத்தையும் கட்டுப்படுத்துதல்.

இப்போது நடைபெற்றுவரும் உலக யுத்தத்தினால் ஏற்பட்டுள்ள கஷ்டங்கள் வேறு எப்பொழுதும் உண்டாயிருந்ததாகச் சரித்திரத்திற் காணப்படவில்லை. இப்பொழுது இக்கஷ்டங்கள் ஏற்பட்டிருப்பதனாலேயே வியாபாரமும் போக்குவரவும் உலகத்தின் எல்லாப் பாகங்களையும் எப்படி ஒன்றோடொன்று பிணைத்திருக்கின்றனவென்பது நன்கறிந்து கொள்ளக்கூடும். சரீரத்தின் ஏதாவதொரு பாகத்தில் கெடுதி சம்பவித்தால், சரீரம் முழுதும் எங்ஙனம் வருந்துகின்றதோ, அங்ஙனமே உலகத்தின் ஒரு பாகத்திலுண்டான உணவுப் பொருள்கள் முதலிய கஷ்டங்கள் எல்லாப் பாகங்களுக்கும் எளிதில் பரவியிருக்கின்றன.

ஏற்றுமதி இறக்குமதியைக் குறைப்பதனால் வியாபாரம் நிலைகுலைந்துபோகிறது. யுத்த சம்பந்தமான கைத்தொழில்கள் அதிகரிக்கவும் போதிய அளவு உணவுப்பொருள்கள் கிடைப்பது அரிதாய்விட்டது. இவ்விரண்டுடன் இலாபத்தின்மேலேயே கண்ணாயிருக்கும் வியாபாரிகளின் பேராசையும் ஒன்றுசேர்ந்திருத்தல், உணவுப்பொருள்களின் விலையேற்றத்திற்குக் காரணமாயிருக்கின்றது. இக்காரணம்பற்றி எளிய ஜனங்கள் மிக்க கஷ்டப்பட நேரிடுகிறது. வயிற்றின் கொடுமையால் அவர்கள் துணிகரமாகக் கொள்ளையடிக்கவும் முற்பட்டுவிடுகிறார்கள். உணவுப் பொருள்கள் கஷ்டத்தினால் அவர்கள் பலங்குறைந்து கொடிய வியாதிகளினால் பீடிக்கப்படுகிறார்கள். அவ்வியாதிகளினால் அவர்கள் அதிகமாக மரணமடைந்தும் வருகிறார்கள். அவர்களுடைய கஷ்டங்களைப் பார்த்தபிறகாவது நாம் கண்விழித்துக்கொண்டு இனியேனும் தக்க ஏற்பாடுகளைச்செய்ய முன்வரவேண்டும். இத்தகைய நெருக்கடியான சந்தர்ப்பத்தில் நம்முடைய பூர்விக ஹிந்து ராஜதந்திரிகள் சாதாரண காலங்களிலும் இவ்விஷயங்களை எங்ஙனம் கவனித்து வந்தனரென்பதைத் தெரிந்துகொள்ளுதல் அவசியமாகும்.

பொருள்களின் விலைகளை அரசனே கட்டுப்படுத்தவேண்டுமென்று யக்கியவாக்கியர் கூறுகின்றனர். மனுநீதிப்படி ஐந்துநாளைக்கொரு முறையாதல் இரண்டு வாரங்களுக்கொரு முறையாதல் அரசன் வியாபாரிகளை வைத்துக்கொண்டு விலைகளைக் கட்டுப்படுத்தவேண்டும். ஒவ்வொரு சாமானுக்கும் ஏற்படுத்தப்பட்ட இலாபத்தை வைத்து வியாபாரிகள் குறிப்பிட்ட விலைக்கே விற்கக் கட்டுப்பட்டிருந்தார்கள். அவர்கள் தங்களிஷ்டப்படி விலையை ஏற்படுத்திக்கொள்ள அதிகாரம்பெற்றிருக்கவில்லை.

இலாபம் மனம்போன போக்காக ஏற்படுத்தப்படவில்லை. விற்பனையின் நிலைமைக்கும் சாமானின் குணத்திற்கும் தகுந்தவாறே ஏற்படுத்தப்பட்டது. சுதேச சாமான்களுக்கும் அன்னிய தேசத்துச் சாமான்களுக்கும் இலாப விகிதம் வெவ்வேறாக ஏற்படுத்தப்பட்டது. சுதேச சாமான்களின் இலாபம் சொந்தவிலையில் 100-க்கு 5 வீதமும், அந்நிய தேசத்துச் சாமான்களின் இலாபம் 100-க்கு 10 வீதமும் ஏற்படுத்தப்பட்டன. ஆனால் இந்த விகிதம் சாமான்கள் செய்யப்பட்ட உடனேயோ இறக்குமதியான உடனேயோ செய்யப்படும் விற்பனைக்குத்தான் உரியது. சாமான்கள் காலந்தாழ்ந்து விற்கப்பட்டால், முதலின் வட்டிக்கு நஷ்டமேற்படாதவாறு இலாபவிகிதமும் படிப்படியாக உயர்த்தப்பட்டது. அந்நிய தேசத்துச் சாமான்களுடைய சொந்த விலையுடன் ஏற்றுமதிச் செலவும் சுங்கக்கட்டணமும் சேர்க்கப்பட்டன. மேற்கூறியவாறு விலை தீர்மானிக்கப்பட்ட பிறகு அரசன் 100-க்கு 5 முதல் 10 வரையில் இலாபவிகிதம் ஏற்படுத்துவான். எந்த வியாபாரியாவது இதர வியாபாரிகளுக்கு நஷ்டமுண்டாகுமாறும், தனக்கு இலாபமுண்டாகுமாறும் சாமான்களை அதிக விலைக்கோ குறைந்த விலைக்கோ விற்றானால், அவன் தண்டிக்கப்படுவான். இதனால் வியாபாரிகளுக்குள் அநாவசியமாகப் போட்டியுண்டாவதில்லை. சாமான்கள் வாங்குவோரும் வியாபாரிகளிடம் ஏமாறுவதில்லை. அரசாங்க ஏற்பாட்டிற்குமாறாக எந்த வியாபாரியேனும் அந்நியநாட்டுச் சாமான்களின் விலைகளை உயர்த்தவேனும் குறைக்கவேனும் முயன்றால், மேற்கூறியவாறே தண்டிக்கப்படுவான்.

பூர்விக ஹிந்து ராஜ்யங்கள் இங்ஙனம் வியாபாரத்தை மேற்பார்வைசெய்து விலைகளைக் கட்டுப்படுத்திவந்தன. அவ்வேற்பாட்டினால் வியாபாரிகள் அக்கிரம இலாபஞ் சம்பாதிக்கவாதல் எளிய ஜனங்கள் நஷ்டப்படவாதல் இடமுண்டாகவில்லை.—தேசபக்தன்.

132

OFFICE OF THE ... OF BOOKS
3-DEC 1918
MADRAS

# முழங்காற் காயம்.

[ஸ்ரீமான் என். எஸ். சுப்பிரமணியன் எழுதியது.]

I

பகல் இரண்டுமணி வெயிலில் ஒருவன் ஒற்றையடிப்பாதை வழியாய் மருவூரை நோக்கி வேகமாய் நடந்துகொண்டிருந்தான். பழுப்பு நிறமாய் வழவழவென்று கணுக்கொரு பூண் போடப்பட்டிருந்த மூங்கில் அவன் வலதுகையில் இருந்தது. அவன் இடுப்பில் ஒரு முண்டு கட்டியிருந்தான்; மேலுக்குச் சட்டை முதலியன ஒன்றும் அணிந்துகொள்ளவில்லை; தலையில் ஒரு பருத்த முண்டாசு கட்டியிருந்தான். அந்த முண்டாசுக்குள் தன் யஜமானன் கொடுத்திருந்த ஒரு கடிதத்தை வைத்திருந்தான். அந்த கடிதத்தை மருவூர் ஸ்ரீமதி கோமதியம்மாளிடம் கொடுத்துப் பதில் பெற்று வருவதற்காகத்தான் அவன் வெகு வேகமாய்ப் போய்க்கொண்டிருந்தான். விஷயம் மிகவும் ஜரூரானபடியால், சிரமத்தையும் பாராமல் ஓட்டமும் நடையுமாகவே அவன் சென்றான். அவன் பெயர் குமரன்.

குமரனுக்குச் சுமார் நூறுகஜ தூரத்திற்கு முன் மற்றொருவன் தலையில் முண்டாசும், கையில் தடியுமாய் விரைவாக நடந்துகொண்டிருந்தான்.

“யாரு முன்னே போரான், முத்துமாதிரியல்ல இருக்கு” என்று மனதில் சொல்லிக்கொண்டான். குமரன்.

இரண்டடி அதிக வேகமாய் நடந்து முன் சென்றவனைக் குமரன் அணுகினான். முத்துதான் என்று நிச்சயமாயிற்று.

“ஏ அண்ணே, முத்து அண்ணே” என்று குமரன் கூவினான்.

முத்து திரும்பிப்பார்த்தான்.

“குமரனா? வாயப்பா. ஏது? எந்தமட்டும்?”

“மருவூர் கோமதியம்மாள் வீட்டுக்கல்ல போரேன்.”

“என்ன விசேஷம்? நானும் அங்கேதான் போரேன். வா, நடந்துகிட்டே பேசலாம்.”

“கடிதம் கொண்டுபோரேன்” என்றான் குமரன்.

“நானும் கடிதந்தான் கொண்டுபோரேன்” என்று முத்து தொடர்ந்து கூறினான்.

பிறகு இருவரும் பேசிக்கொண்டே நடந்து சென்று கோமதியம்மாள் வீட்டை யடைந்தார்கள்.

II

மாலை ஐந்து மணிக்குக் காற்றுவாங்க சுப்பையத் தேவன் வெளியில் புறப்பட்டான். இவனுக்கு வயது 25 இருக்கும்; நல்ல கம்பீரமுள்ள அழகு வாய்ந்தவன்; கையில் வெள்ளிப் பூண்போட்ட பிரம்பு, தலையில் பட்டு உருமால், பித்தானில்லாமல் நாடாவால் முடியப்பட்ட அங்கி ஆகிய இவை சகிதமாய்க் காணப்பட்டான். இவன்தான் குமரனின் யஜமானன்; ஏரிக்கரையின்மேல் நடந்துகொண்டிருந்தான்.

“குப்பண்ணன் பைத்தியக்காரன். அப்போதே நான் சொன்னேன்: ‘அவள் என்னைத்தான் மணம்புரிய இஷ்டப்படுவாள். நீ வீணில் பிரயத்தனப்படாதே; வேறு கலியாணம் செய்துகொண்டு சௌக்கியமாயிரு. நானே அவளை அடைய அவளுக்கு இஷ்டம்’ என்று பலதரம் சொல்லியும் அவன் கேழ்க்கவில்லை. இப்போது என்ன செய்வான்? நேற்று அவனும் கோமதிக்குக் கடிதம்......” என்று சுப்பையத்தேவன் தனக்குத்தானே பேசிக்கொண்டிருந்தபொழுது, முதுகில் ஒருவன் தட்டவே திடுக்கிட்டுத் திரும்பினான். குப்பண்ணத் தேவன் எதிரில் நின்றான்.

“ஏ! குப்பண்ணா!! சொன்னதைக் கேட்க மாட்டேன் என்றாயே. இதோ பார்” என்று சொல்லி அவன் கையில் ஒரு கடிதத்தை சுப்பையன் வைத்தான்.

மருவூர்,
.........பசலி 897.

அன்புள்ள ஐயா,

தங்கள் நிருபம் கண்டேன்; தன்யையானேன். நாளைப்பகல் இருபத்தைந்து நாழிகைக்குத் தங்களை இங்கு எதிர்பார்க்கிறேன்.

தங்கள்:
கோமதி.

சுப்பையத்தேவர் அவர்களுக்கு.

இதைப்படித்த குப்பண்ணன் “கொல்” என்று சிரித்தான்.

“ஏனப்பா சிரிக்கிறாய்?” என்று சற்றுக் கோபத்துடன் சுப்பையன் கேட்டான்.

“இதைப்பார்” என்று சொல்லி ஒரு கடிதத்தைக் காண்பித்தான் குப்பண்ணன்.

மருவூர்,
.........பசலி 897.

அன்புள்ள ஐயா,

தங்கள் நிருபம் கண்டேன். தன்யையானேன். நாளைப்பகல் இருபத்தைந்து நாழிகைக்குத் தங்களை இங்கு எதிர்பார்க்கிறேன்.

தங்கள்:
கோமதி.

குப்பண்ணத்தேவர் அவர்களுக்கு.

## III

‘சைய்! சூடு பாழுங்குதிரையை’ என்று சொல்லிக்கொண்டு, பலமாய் இரு குதிகால்களாலும் குதிரையின் விலாக்களில் குப்பண்ணன் இடித்தான். குதிரை வலி தாங்கமாட்டாமல் சற்றுக் கலங்கிற்று; வாயில் நுரைகள் விற்று; சரீரமெல்லாம் ஜலப்ரளயமாய் வேர்த்திருந்தது. இன்னும் உதைவிழுமோ என்ற பயத்தால் அது தன்னால் கூடியமட்டும் வெகு வேகமாய் ஓடிற்று. என்ன ஓடியும் அதற்கு முன் சென்றுகொண்டிருந்த குதிரையை அணுக முடியவில்லை.

முன் சென்றுகொண்டிருந்த சுப்பையன் தன்னைக் குப்பண்ணன் முந்துவதற்குப் பிரயத்தனப்படுகிறான் என்பதை அறிந்தான். மெலிந்த நீண்ட கால்களையும், ஒடுங்கின இடையையும் உள்ள தன் அரபிக்குதிரையைத் தட்டிவிட்டான். அரபிக்குதிரை காற்றாய்ப் பறந்தது.

சுப்பையன் பேசுவதற்குமுன் தான் கோமதியிடம் பேசவேண்டுமென்ற எண்ணம் குப்பண்ணன் மனதில் ஊன்றிவிட்டது; தவிரவும், அப்படிச்செய்தால்தான், அவள் தனக்குக் கிட்டுவாள் என்றும் எண்ணினான். கோமதி இருவரையும் இருபத்தைந்து நாழிகைக்கு வரச்சொன்னதனால், இருவருக்கும் குதிரைப் பந்தயம்தான் ஏற்படுத்தினாளோ என்றும் எண்ணினான்.

குப்பண்ணன் பலவிதமாய் யோசித்து, கடைசியில் எவ்விதத்திலும் சுப்பையத் தேவனுக்கு முன் தான் கோமதியிடம் சென்று பேசிவிட வேண்டும் என்று தீர்மானித்தான்.

ஆ! குப்பண்ணனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. “என்ன செய்வது, அப்படித் தான் செய்யவேண்டும்; வேறு வகையில்லை” என்று தனக்குள் சொல்லிக்கொண்டான். பிறகு, குதிரையைச் சற்று நிறுத்திக்கொண்டு நன்றாய்க் குறிபார்த்துக் கருங்கல்லொன்றை எறிந்தான்.

சுப்பையத்தேவன் அரபிக் குதிரையின் தொடையில் குப்பண்ணன் எறிந்த கல் படவே, குதிரை நடக்க முடியாமல் அப்படியே சாய்ந்தது. சுப்பையன் சரேலென்று குதிரையினின்றும் கீழே குதித்தான்; குப்பண்ணனை வெறுத்தான்; குதிரையைத் தட்டிக் கொடுத்தான். இதற்குள் குப்பண்ணன் சுப்பையனிருக்குமிடத்திற்கப்பால் வாயுவேகமாய்ச்

சென்றான். கோமதி வீட்டிற்குச் சமீபமாய் வந்ததும், குப்பண்ணனுக்கு ஏதோ ஒரு யோஜனை தோன்றிற்று; குதிரையைவிட்டுக் கீழே இறங்கினான்; அருகிலிருந்த பாராங்கல்லில் தன் முழங்காலை மோதிக்கொண்டான். இரத்தம் கொட்டி வெள்ளை எலும்பும் வெளியில் தோன்றிற்று. தலைக்குட்டையைக் கிழித்துக் காயத்திற்குக் கட்டினான். தள்ளாடித் தள்ளாடி குதிரையை ஒரு கையில் பிடித்துக் கொண்டு மெதுவாய் நடந்தான்.

## IV

"சைய்; பதரே! பந்தயம் ஓடிக் குப்பண்ணனை ஜயிக்க முடியாதபோனால், கருங்கல்லால் அவன் முழங்காலை முறித்துப் போடுவது என்ன ஆண்மைத்தனம். போ!" என்று கம்பீரமாய்ச் சொன்னாள் கோமதி.

"கோமதி, நீ ஏதோ தவறுதலாய்ப் பிதற்றுகிறாய். நான் அப்படிச் செய்யவில்லை. எனக்குக் கருங்கல் எறியத் தெரியாதென்று ஊரெல்லாம் தெரியும். நீ பேசும் பேச்சிலிருந்து உனக்கு என்மீது அன்பு இல்லை என்று வெளிப்படுகின்றது. அன்பு இல்லாத இடத்தில் எனக்கு வேலை இல்லை" என்று சொல்லிக் கபடமற்ற பார்வையால் சுப்பையன் அவளைப் பார்த்தான். பிறகு மரத்தில் கட்டியிருந்த தன் குதிரையை மெதுவாய் அவிழ்த்து நடத்திக்கொண்டு வீடு நோக்கிச் செல்ல வாரம்பித்தான். குதிரை நடக்கமாட்டாமல் கஷ்டப்பட்டு நொண்டி நொண்டி நடந்தது. இப்படி நொண்டிக் கொண்டு குதிரை நடப்பதையும், அதன் தொடையில் காயம்பட்டிருப்பதையும் வீட்டுத் திண்ணையிலிருந்து கோமதி பார்த்தாள். சுப்பையன் கபடமில்லாத பார்வையும் அவள் கண்முன் நின்றது. "ஆஹா! சுப்பையன் அசுவக்குதிரை என் நொண்டுகிறது?" என்று யோசித்தாள். அவள் மனதிற்கு உண்மை உடனே புலப்பட்டது. சீக்கிரம் தாதியை அனுப்பிச் சுப்பையனைத் தான் வணக்கத்துடன் அழைத்ததாகச் சொல்லி கூப்பிட்டுவரும்படி சொல்லியனுப்பி விட்டு உள்ளே சென்றாள்.

நன்றாய்ச் சிங்காரிக்கப்பட்டிருந்த அறையில் கட்டிலின்மீது குப்பண்ணன் முழங்கால் கட்டுடன் படுத்துக்கொண்டிருந்தான். அவனருகில் வந்து நின்றாள் கோமதி.

"குப்பண்ணரே! உமக்குப் பின்வந்துகொண்டிருந்த சுப்பையத்தேவர், நீர் முன் செல்லுவது பொறுக்காமல் உம்மைக் கருங்கல்லாலடித்தாரோ? சரிதான். அப்படியா? அது உமது பின்புறத்தில் எங்கேயாவது படவேண்டியிருக்க, முன்புறத்திலிருக்கும் முழங்காலில் பட நியாயமென்னவோ? என்ன காரியம் செய்தீர் நீர்! ஏன் இவ்வாறு அபவாதம் சொல்லி என்னை அபராதியாக்கினீர்? நீர் என் கிருஹத்தில் இருக்க அருகரல்லர்; நடந்துவிடும் வெளியில்" என்று கோமதி உக்கிரமான பார்வையுடன் கோபத்தால் பெருமூச்சுவிட்டுக் கடிந்து கூறினாள்.

"கோமதி! நான் அற்பகாரியத்தைச் செய்தேன். நீ உன் புத்திசாலித்தனத்தால் அதைக் கண்டுபிடித்துவிட்டாய். இனி ஒளிப்பதில் என்ன லாபம். எனக்கு உன்மேலிருந்த ஆசையால் அவ்விதம் செய்தேன். என் மனோபீஷ்டமும் பூர்த்தியாயிற்று. நான் சொன்னவற்றையெல்லாம் நம்பி எனக்கு நீ செய்த சிசுருஷைகளும், நடக்க முடியாமலிருந்த என்னை உனது கைகளால் தாங்கி உன் படுக்கையில் படுக்க வைத்துச் செய்த உபசாரங்களும் என் மனதைச் சந்தோஷிப்பி..........."

"அதமா, வெளியில் போ! என்னிடம் இவற்றையெல்லாம் கூறுவது நன்றன்று" என்று சகிக்கமாட்டாத கோபத்துடன் கோமதி கடிந்து கூறினாள். குப்பண்ணனுக்கும் இவ்வார்த்தைகளால் சற்றுக் கோபமுண்டாகவே, கோமதியை அடிக்கவெண்ணி அவன் தன் கையை ஓங்கினான்.

ஓங்கிய கையைக் கெட்டியாய்ப் பிடித்துக் குப்பண்ணனை வெளியில் இழுத்தெறிந்தான் ஒருவன். அவன்தான் சுப்பையன்.

"நான் தங்களுக்குச் செய்த அபராதத்தை மன்னிக்கவேண்டும்" என்று சொல்லி வெட்கத்தால் இரு கைகளாலும் முகத்தை மூடிக்கொண்டு சுப்பையத்தேவன்பேரில் சாய்ந்தாள் கோமதி.

---

## Sir J. C. Bose.

(A Sketch of his Life and Career.)

### ஸர் ஜகதீஸ சந்திர போஸ்.

இவர் வங்காள ராஜதானியில் டெக்கா ஜில்லாவிலுள்ள பிக்ராம்பூர் என்ற கிராமத்தில் ஜனித்தவர். இவர்தந்தையான பகவான் சந்திர போஸ் என்பவர், நற்குண நற்செய்கைகளிற் சிறந்த பெருமான். பரீட்பூர் (Faridpur) என்ற இடத்தில் டெபுடி கலெக்டர் வேலையைப் பார்த்துவந்தும் தற்காலத்துப் பெரிய உத்தியோகஸ்தர்களைப்போலல்லாமல் தம் மைந்தனுடைய கல்விவிஷயத்தில் வெகுவாய்க் கவனத்தைச் செலுத்தித் தக்க பிராயத்தில் அவ்வூர்ப் பாடசாலையில் கல்வி கற்கும்படி அனுப்பினர். அப்போதே இங்கிலீஷ்ப் படிப்பு பிரபலமாயிருந்தது. பெரிய மனிதர்களெல்லோரும் தங்கள் சிறுவர்களை இங்கிலீஷ் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்புவதுதான் கௌரவம் என்றும் பாடசாலைக்கு அனுப்புவது அகௌரவமென்றும் நினைத்திருந்தார்கள். ஆயினும், இவரோ இதையெல்லாம் லக்ஷியம் செய்யாமல், காலைமுதல் மாலைவரையில் வேலைசெய்து ஜீவனம்செய்யும் கூலிக்காரர்களோடும் மற்றவர்களோடும் சேர்ந்து படிக்கும்படியான பாடசாலைக்கே அனுப்பினர். அப்படிக் கல்வி பயில்வதிலும் பலவிதமான நன்மை யுண்டென்று இவர் பிற்காலத்தில் கூறியிருக்கிறார். "மனது சுலபமாய்த் திரும்பும்படியான சிறு பிராயத்தில் நான் பாடசாலையில் வாசித்ததனுல் என் தாய் பாஷையை நன்ருய்க் கற்றுக்கொண்டேன்; அறிவினும் ஆண்மையினும் மற்றெவ்வகையினும் மேம்பட்ட நமது முன்னோர் எழுதியுள்ள பெரிய இதிஹாஸ, புராணங்கள்மூலமாய் நமது நாகரிகம் எப்படிப்பட்டது என்பதைச் சரிவர உணர்ந்தேன். தவிரவும், இங்கிலீஷ் கற்றவுடனே பலருக்கும் ஒரு பெரிய அஹம்பாவம் உண்டாய்விடுகிறது. அந்த அஹம்பாவம் எனக்கு இல்லாமற்போனதே பெரும்பாக்யம்" என்று ஒரு இடத்தில் சொல்லியிருக்கிறார்.

இவரது தாயார் ஆசார ஒழுக்கங்களிற் சற்றும் தவருத பெண்மணி. இவர் ஒரு சமயத்தில் தமது கலாசாலை மாணவர்களிற் சிலரோடு வீட்டுக்கு வந்தபோது, எல்லோரையும் ஜாதி வித்தியாசம் கொஞ்சமும் பாராட்டாமல் செவ்வனே உபசரித்து, நன்ருய்ப் போஜனம் செய்வித்து அவர்கள்மனத்தைக் களிக்கச்செய்தார். "தாய்க்குள்ள அன்பும் ஆதரவும் மற்றெங்குமுளதோ?" என்று இவரே தம் தாயாரைப் பற்றி வியந்து பேசியிருக்கிறார்.

இப்பேர்ப்பட்ட மேன்மைக்குணமுடைய தாய்தந்தையர்க்குப் பிறக்கும் புத்திரனும் சன்மார்க்கத்திலேயே ஒழுகுவான் என்பதற்கு ஐயமுண்டோ? நமது ஜகதீச சந்திரரும் பாடசாலையிற் கற்கவேண்டிய விஷயங்களில் தேர்ச்சியுற்று, பிறகு கல்கத்தாவிலுள்ள ஸெயிண்ட் க்ஸேவியர்ஸ் காலேஜில் (St. Xavier's College) பி. ஏ. (B. A.) பரீக்ஷை கொடுத்தார். அப்பால் அவருக்கு இங்கிலாந்துக்குப்போய் இண்டியன் ஸிவில் ஸர்விஸ் (Indian Civil Service) பரீக்ஷையில் தேறி ஜில்லா கலெக்டர் உத்தியோகம் பெற்றுவரவேண்டும் என்ற ஆசை அதிகமாயிருந்தது. ஆயினும், இவரது தகப்பனருக்கு இது சம்மதமில்லை. உத்தியோகம்பெற்று மற்றவர்களை அரசாட்சி செய்வதை

க்காட்டிலும் ஞானோதயம்பெற்று, தன்னைத் தான் ஆண்டுவருவதே மேன்மையென்பது அவர் கருத்து. ஆதலின், "மேற்படிப்புக்காவது இங்கிலாந்துக்குப் போகிறேன்" என்று இவர் தந்தையிடம் அனுமதி கேட்டபோது, அவர் உத்தரவளித்ததுமல்லாமல் பூர்ண சந்தோஷமாய் ஆசிர்வதித்தார். அப்படியே இவர் கேம்பிரிட்ஜுக்குப்போய் (Cambridge) கிறைஸ்ட் காலேஜில் (Christ College) சேர்ந்து 1884-ம் வருஷம் பி. ஏ. பரீக்ஷையில் தேறி அடுத்த வருஷம் லண்டன் யூனிவர்ஸிடியிலிருந்து பி. எஸ்ஸி (B. Sc.) பட்டமும் பெற்றார்.

இவ்வாறு கௌரவமாய்த் தம் மேற்படிப்பை முடித்து, கல்கத்தாவுக்குத் திரும்பும்போது இவர் மறுபடியும் இங்கிலாந்துக்குப் போய்த் தாம் கண்டுபிடித்த நவீன சாஸ்திர விஷயங்களைப்பற்றிப் பிரசங்கம் செய்யப்போகிறார் என்று யாரே எண்ணியுள்ளார்?

இவர் இங்கிலாந்திலிருந்து திரும்பினவுடனே கல்கத்தாவிலுள்ள பிரஸிடென்ஸிகாலேஜில் முக்கியஉபாத்தியாயர்களுள் ஒருவராய் நியமிக்கப்பட்டார். இந்தியர்களுக்குள் இவ்வளவு இளவயதில் இப்பெருமையான வேலை கிடைப்பதரிதாயினும், இவர் கர்வமென்பது சற்றுமில்லாமல், தமது சிஷ்யர்களுக்குச் சாஸ்திரஞானம் நன்றாய்ப் போதிப்பதற்கு வேண்டிய கருவிகள் இல்லையேயென்று ஏக்கமுற்றார். ஆயினும் மனோதைரியத்தைக் கைவிடாமல், தம்மிடத்திலிருக்கும் கருவிகளையும் ஆயுதங்களையும் வைத்துக்கொண்டே ஒருகுறைவுமில்லாமல் சரிவரத் தமது உத்தியோகத்தைப் பார்த்துவந்தார். இப்படிப் பத்து வருஷம் கழிந்தபிறகு காலேஜில் ஒருசிறிய லெபொரெடரி (Laboratory) வைக்கப்பட்டது. இதினின்று இவரடைந்த நன்மை அளவற்றது. கலாசாலையிலுள்ள பிள்ளைகளுக்குச்சொல்லிக்கொடுப்பதைத்தவிர, தமக்கு ஒழிந்த நேரத்தில் இந்த லெபொரெடரியில் வந்து பலவிதமான 'எக்ஸ்பெரிமெண்ட்கள்'(Experiments) செய்துவந்தார். இதனால் இவருக்குப் புலப்பட்ட விஷயத்தை 1895-ம் வருஷம் மேமாதம் ஒரு வியாஸம் எழுதி, வங்காளத்திலுள்ள பெரிய மாதாந்தப் பத்திரிகையொன்றில் பிரசுரித்தார்; இன்னும் அதே வருஷத்தில் மின்சாரத்தைப்பற்றி ஆலோசனைசெய்து, 'எலெக்டிரிஷியன்' (Electrician) என்ற பத்திரிகையில் இரண்டு வியாஸம் எழுதி வெளியிட்டார்.

இவ்வியாசங்களின் அருமையையும் மேன்மையையும் லண்டனிலுள்ள ராயல் ஸொஸைடி (Royal Society) என்றசபையார் வெகுவாய்ப் பாராட்டி, கல்வியபிவிருத்திக்காக பார்லிமெண்டார் கொடுத்திருக்கும் தொகையில் ஒரு பாகத்தை இவருக்கு அளிப்பதாய்ச் சொன்னார்கள். அதைச் சந்தோஷத்துடன் ஏற்றுத் தம்ஆலோசனையை மேன்மேலும் பற்றிச் சென்றார்.

இப்படியிருக்க, 1896-ம் வருஷத்தில் இவருக்கு அற்புதமான ஒரு விஷயம் தெரியலாயிற்று. ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குத் தந்தியனுப்புவதென்றால் வழிமுழுவதும் கம்பி போடவேண்டியிருக்கிறதே, அது இல்லாமல் தந்தி பேச முடியாதா என்று யோசித்துக்கொண்டிருந்தார். பலநாள் கழித்து அப்படிச் செய்வது சாத்தியம் என்று இவர் கண்டுபிடித்தார்.

இதே சமயத்தில் இதே விஷயத்தைப்பற்றி பொலோனா (Bologna) யூனிவர்ஸிடியில் மார்கோனி (Marconi) யும், அமெரிக்கா தேசத்திலுள்ள ஒரு பெரிய கலைஞரும், இந்தியாவில் நமது ஜகதீச சந்திரரும் ஆலோசனை செய்துகொண்டிருந்தார்கள். இம்மூவரில் நமது ஜகதீசரே இவ்விஷயத்தை முதலிற் கண்டுபிடித்தார் என்பது திண்ணம். 1895-ம்வருஷத்திலேயே இவர் கல்கத்தா டௌன் ஹாலில் கவர்னர் அவர்கள்முன்பாக இவ்விஷயத்தை நிரூபித்துக் காட்டியிருக்கிறார்.

இச்சங்கதியறிந்தவுடனே 1897-ம் வருஷத்தில் இங்கிலாந்திலுள்ள ராயல் ஸொஸைடியின் முன்பாகப் பிரசங்கம்செய்யவேண்டும் என்று பலரும் வேண்டிக்கொண்டார்கள். அதற்கு

மனமிசைந்து இவர், "மின்சார அலைகள்" (Electric Waves) என்பதைப்பற்றிக் கேட்போர் வியப்புறும்படி பிரசங்கித்தார்.

கல்வி, நாகரிகம், செல்வம் முதலியவற்றில் மிகச்சிறந்தவர்களாகிய லண்டன் சபையோரே இவரைக் கௌரவப்படுத்துவதைக் கண்டு வங்காள கவர்ன்மெண்டாரும், இவரை மதிக்கத் தொடங்கி, இவருக்கு வேண்டிய உதவி புரிய முன்வந்தார்கள்.

நிற்க. 1900-ம் வருஷத்தில் பூலோகத்திலுள்ள சாஸ்திரக் கலைஞர்களெல்லோரும் பிரான்சு (France) தேசத்தின் தலைநகராகிய பாரிஸில் (Paris) சாஸ்திர விஷயங்களை ஆராய்ச்சி செய்ய ஒரு பெரியகூட்டங் கூடினார்கள். இந்தியர்களில் ஒருவரைத் தேர்ந்தெடுத்து அம்மகா சபைக்கு அனுப்பவேண்டிய தருணம் நேர்ந்ததில், இந்திய கவர்ன்மெண்டாரும், வங்காள கவர்ன்மெண்டாரும் கூடிப்பேசி, இவரையே அனுப்பவேண்டுமென்று தீர்மானஞ் செய்தார்கள். இவரும் அதற்குச் சம்மதமுற்று, பாரிஸுக்குப் போய், தாம் ஆராய்ச்சி செய்துள்ள பல அபூர்வமான விஷயங்களைப்பற்றி உபந்நியாசஞ்செய்து பெரும்புகழ் படைத்தார். ஆதலின், பிரான்சு தேசத்திலுள்ள அறிஞர்கள் தமது சபையின் அங்கத்தினருள் ஒருவராய் இவரை நியமனஞ்செய்தார்கள்.

அடுத்த வருஷம் (1901) மறுபடியும் இவர் இங்கிலாந்துக்குப்போய், ராயல் ஸொஸைடியின் வேண்டுகோளுக்கு எற்றபடி இரண்டாவது தடவை பிரசங்கம்செய்தருளினார்.'

சாஸ்திர ஞான விஷயங்களில் இவருக்குள்ள ஆராய்ச்சியை மெச்சி, இந்திய கவர்ன்மெண்டார் 1903-ம் வருஷம் இவருக்கு ஸி. ஐ. இ. (C. I. E.) என்ற கௌரவப் பட்டத்தை அளித்தார்கள்.

1906-ம் வருஷத்தில் இவர், செடிகளுக்கும் மனிதர்களைப்போல் சுகதுக்கங்களையும் கஷ்டநிஷ்டூரங்களையும் உணரும் சக்தி நுட்பமாய் உள்ளது என்பதைச் சித்தாந்தஞ் செய்து, ஒரு புஸ்தகத்தை எழுதி வெளியிட்டார். (Plant Response.) 1907-ம் வருஷத்தில் மின்சார விஷயமாய்த் தாம் நூதனமாய்க் கண்டு பிடித்திருப்பவைகளை 'எலெக்ட்ரோ பிஸியாலஜி' (Elctero-Physiology) என்ற புஸ்தகத்தில் பிரசுரம் செய்தனர். இவ்விரு புஸ்தகங்களும் வெகு ஆச்சரியப்படத் தக்க நவீன விஷயங்களைப்பற்றிக் கூறுவதனால், நமது ஜகதீச சந்திருடைய பெயர் உலகெங்கும் பரவிற்று. அமெரிக்கா, ஜெர்மனி, ஜப்பான், இங்கிலாந்து முதலிய தேசங்களிலிருந்து இவருக்குப் பல கடிதங்களும், உபந்நியாசம் செய்யும்படி வேண்டுகோள்களும் வரத்தொடங்கின. இவையெல்லாவற்றையும் உணர்ந்து 1911-ம் வருஷம் டிஸம்பர் மாதம் நமது ஐந்தாவது ஜ்யார்ஜ் சக்கரவர்த்தியார் சிங்காதனம் எறியபோது இவருக்கு ஸி. எஸ். ஐ. (C.S.I.) என்ற பட்டம் அளித்தார்.

எனினும், தாம் கண்டுபிடித்த உண்மைகளை சாஸ்திர வல்லமையுள்ளவரெல்லோரும் அங்கீகாரம் செய்வதற்கு இவரே ஒவ்வொரு தேசத்துக்கும் சென்று பிரசங்கங்கள் செய்யவேண்டியது அவசியமாயிற்று. அதற்காக இவர் இந்தியகவர்ன்மெண்டாரின் உதவியடைந்து, 1915, 1916 இவ்வருஷங்களில் பல தேசங்களுக்குப் போய், ஆங்காங்குள்ள சர்வ கலாசாலைகளில் உபந்நியாசம் செய்தார். எங்கும் இவரை நல்வரவேற்று மனப்பூர்வமாய்க் கொண்டாடினார்கள் என்பது அக்காலத்துப் பத்திரிகைகளினின்று தெளிவாய் அறியலாம். இப்படி விஜயம் செய்து, தமது கொள்கைகளை ஸ்திரமாய் ஸ்தாபித்துத் திரும்பி, கல்கத்தாவுக்கு வந்தவுடன் அந்நகரவாசிகள் எல்லாரும் ஒரு பெரிய சபை கூடி இவருக்கு வந்தனமளித்து உபசரித்தார்கள்.

தமக்கு இப்படி அழியாப்புகழ் அமைந்திருப்பினும் இவருக்கு மனதில் திருப்தியேயில்லை. மற்ற தேசங்களைக்காட்டிலும் இந்தியாவானது சாஸ்திர ஞானவிஷயத்தில் (Scientific Research) தாழ்வான ஸ்திதியில் இருப்பதைக்

கண்டு விசனமுற்று, இக்குறையை நீக்கும் பொருட்டுத் தாமே ஒரு பெரிய கலாசாலை ஏற்படுத்தி, அதில் கல்வியூக்கம் அதிகமாயுடைய சிலரைத் தமது சிஷ்யராகச் செய்து வைக்க வேண்டும் என்ற எண்ணம் இவருக்கு வெகு நாளாய் உண்டு. ஆயினும் அப்படிச் செய்வதென்றால் ஏராளமான திரவியமும், மனக்கிளர்ச்சியுடைய பல பெரியோருடைய சேர்க்கையும் வேண்டுமென்பதை நன்கறிந்தவராதலால், இவ்வெண்ணத்தை ஒருவருக்கும் வெளியிடாமல் தம் மனதிலேயே வைத்திருந்தார். கடைசியில் தக்க சமயம் வாய்த்தபோது, இவர் தமது அன்புள்ள நண்பர்கள் சிலரிடத்தில் இதைப்பற்றிப் பிரஸ்தாபம் செய்தார். அவர்கள் உதவியாலும் ஈசனருளாலும் இவ்வெண்ணம் நிறைவேறி நவம்பர் மாதம் இக்கலாசாலையை ஏற்படுத்தினார். (Bose Research Institute.)

நாளுக்குநாள் இவரது கல்விச் செல்வம் பெருகவே, கவர்ன்மெண்டாரவர்களுக்கும் இவரிடத்திலுள்ள மதிப்பும் மரியாதையும் அதிகரித்துக்கொண்டேயிருந்தன. ஆதலின், 1917-ம் வருஷத்தில் இவருக்கு ஸர் (Sir) என்ற பட்டப்பெயரைக் கொடுத்தார்கள். அப்போது இவரது மாணவர்களெல்லாரும் சேர்ந்து வந்தனமளித்து உபசரித்தார்கள். அவ்விராஜதானியில் பெயர்பெற்ற மற்றொரு சாஸ்திர ஞானியாகிய டாக்டர் பி. ஸி. ரே என்பவர் (Dr. P. C. Ray) அக்கிராசனம் வகித்து, "உண்மையையே நாடும் நமது முற்கால ரிஷிகளைப்போல் இவர் தமது வாழ்நாள் முழுவதையும் சாஸ்திர ஆராய்ச்சியிலேயே செலுத்திவந்த மஹானுபாவர். தாம் புதிதாய்ச் செய்திருக்கும் கருவிகளை வேறெவரும் செய்யக்கூடாது என்று கூறி, கவர்ன்மெண்டாரிடமிருந்து இவர் ஒரு உத்தரவு வாங்கியிருந்தால் இதுவரையில இவர் அநேக கோடிரூபாய் சம்பாதித்திருக்கலாம். ஆனால் கல்வியையும், ஞானத்தையும் விற்பது என்றால் இவருக்கு மனம் இசையவில்லை. இவர் மானிடரெல்லோரும் ஒருவிதமான வேறுபாடுமில்லாமல் தாம் ஆராய்ந்த உண்மைகளை அறிந்து இன்புறவேண்டும் என்று நினைக்கும் உத்தமோத்தமர்" என்று பலவாறாய்ப் புகழ்ந்துள்ளார்.

எவ்வளவு நிபுணனாய் இருந்தாலும் ஒருவனுக்குத் தன் நாட்டில் கௌரவம் கிடைப்பது அருமை. அதிலும் இந்தியாவிலோ சொல்லவேண்டியதில்லை. உதாரணமாக: ஈசுவராவதாரமென்றே சொல்லப்படும்படியான ஸ்வாமி விவேகானந்தர் இங்கிருந்து அமெரிக்காவுக்குப் போனபோது, சென்னையிலுள்ள (Dr. S. Subrahmanya Iyer) ஹைகோர்ட் ஜட்ஜ் மணி ஐயரைத் தவிர வேறெவராலும் மதிக்கப்பட்டவரல்லர். ஆயினும், அங்குச்சென்று அமெரிக்காவிலுள்ளவர்கள் பலராலும் புகழப்பட்டவுடனே இங்கேயும் அவரைத் துதித்துக் கொண்டாடினார்கள். இன்னும் காவியத்தில் மகா வல்லமையுடைய ரவீந்திரநாத் டாகோர் (Robindra Nath Tagore) என்பவருக்கும் ஐரோப்பாவிலிருந்து நோபில் பிரைஸ் (Nobel Prize) என்ற பரிசு அளிக்கப்பட்டபின்புதான் இந்தியாவில் புகழ் பரவிற்று. அதேமாதிரி, நமது ஜகதீச சந்திர போஸுக்கும் லண்டனிலுள்ள ராயல் ஸொஸைடியார் கௌரவப்படுத்திய பின்பே, இந்திய கவர்ன்மெண்டார் உதவி செய்ய ஆரம்பித்தார்கள். இப்படியே இவருக்கு லண்டன் யூனிவர்ஸிடியிலிருந்து டி. எஸ்ஸி (D. Sc.) பட்டம் வெகுநாளைக்கு முன்பே (1896-ம் வருஷத்திலேயே) அளிக்கப்பட்டதால், கல்கத்தா யூனிவர்ஸிடியிலும் அப்பட்டத்தை இவருக்குக் கொடுத்துத் தாமே கௌரவம் செய்துகொண்டார்கள்.

பஞ்சாப் யூனிவர்ஸிடியார், 1913-ம் வருஷத்தில் வரவழைத்து உபந்நியாசம் செய்யும்படி கேட்டுக்கொண்டு, அதற்கு வெகுமதியாய் 1200 ரூபாய் கொடுத்தார்கள். பிறவியிலேயே உதாரகுணமுடைய இவர், அதைத் தாம் ஏற்றுக் கொள்ளாமல், மேற்படிப்பு வாசிப்பவர்களில் புத்திக்கூர்மையுள்ள ஒரு மாணவருக்கே அளிக்கும்படி கூறிவிட்டார்.

இவ்வருஷ ஆரம்பத்தில் (1918) நமது ராஜப் பிரதிநிதியாகிய செம்ஸ்போர்டு பிரபு அவர்கள் (Lord Chelmsford) இவரிருப்பிடத்துக்குப் போய், இவர் நூதனமாய் ஆராய்ந்திருக்கும் விஷயங்களைப்பற்றிச் சாவகாசமாய்ப் பேசிக்கொண்டிருந்ததுமல்லாமல், வெகுவாய் மெச்சித் தம் அத்யாநந்தத்தையும் கூறினார்.

இவ்வாறே இவர் கல்வியபிவிருத்தியில் ஊக்கமுள்ளவராய், தமக்கும் தம் ஜனன பூமியாகிய இந்து தேசத்துக்கும் புகழ் அடைவித்து நீடூழி வாழ்வாராக!

என். ஆர். கேதாரி ராவ், எம்.ஏ., எல்.டி.

---

## New Sonnets in Tamil.

By Mr. V. Subba Aiyer.

## தமிழ் நவீனப் பாசுரங்கள்.

### 13. நண்பன்.

நேரிசையாசிரியப்பா.

உடுக்கை யிழந்திடி லுதவிடுங் கைபோல்
இடுக்கண் களைபவ னிணையிலா நண்பன்
என்றுமுன் வள்ளுவ ரியம்பிய தறிந்தும்
நன்றிபா ராட்டிடும் நண்பரெத் தனைபேர்?
நண்பெனுங் குணத்தை நாமுண ரப்புகின்
பண்புடன் தோன்றுவ பகர்ந்திடல் கேண் [மோ—
ஒருவனை யுலகினி லுவப்புட னின்றோர்
திருவுடன் றன்னையே சேர்ந்தோ ரென்ன [வும்
அவன்றன் றேவியைச் சோதரி யென்ன [வும்
கவலையுங் களிப்பு மிருவர்பங் கென்னவும்
நினைந்திடு மனநிலை புனைந்தவ ரிருவர்
கனங்கொளு நண்பெனுங் கதிதனை யுடை [யோர்
என்பதை யின்போ டியம்புவர்
துன்பினைக் களைந்திடுந் தூயபெண் மணி [யே:

---

### 14. பெண்.

நீலமண்டில வாசிரியப்பா.

பெண்ணெனச் சொல்வதும் பேயெனச் [சொல்வதும்
எண்ணிடி லொன்றென வியம்புவர் சில [பெயர்;
அன்னவர் பேச்சை யாராய்ந் துணர்திடில்
சொன்னவர் சூக்கும மதியிலா ரென்பது
உள்ளங் கையுறை நெல்லியங் கனியெனக்
கொள்ளக் கிடப்பதைக் குறித்தக மகிழ் [வாம்,
ஏனெனி லிவ்வுல கந்தனிற் பெண்கள்,
மான முடனே வாழ்பவ ராயின்,
தங்களைத் தந்த குலத்தின் கீர்த்தியைப்
பொங்கச் செய்துதாம் புகுந்த மனையிலும்
மங்களம் பெருக்கி மகிழ்ச்சியை யெழுப்பி
எங்கணு மதனிசை பரவச் செய்தலோ
டுலகப் புகழ்படை யுரமே வாய்ந்த
பலபுத் திரர்களைத் தருவராம் பாவையே:

---

### 15. பெண்ணின் சிருட்டி.*

நீலமண்டில வாசிரியப்பா.

பிரம னாதியிற் பொரிதக மகிழ்ந்து
கிரமமாய்ப் புவிதனைப் படைத்ததன் [பின்பு
மனிதனை யிங்கு மேன்மையாய் வைத் [திடத்
துணியிலா தன்னவன் ஜொலிப்புடன் [வாழ்ந்தான்;
இங்ஙனஞ் சிலநா ளிசையுடன் செல்கை [யில்
அங்கொரு நீரி லவன்முகங் காணவே
'ஐயோ! இப்பொரு ளகப்பட வேண்டுமே

---

* The ideas Contained in this and the following two sonnets are found in an old Sanskrit story.

கையா லிதுதனைக் கட்டவும் வேண்டுமே'
என்று மனத்தினி லெக்குறப் பிரமன்
நன்று லோசனை நலமுறச் செய்தே
அன்றிலி னன்பும் புலியின் கொடுமையும்
கிள்ளையின் மெதுவும் வைரக் கடினமும்
சூரியன் மகிழ்ச்சியும் காரி னழுகையும்
ஒன்றோ டொன்று சேர்த்தது பெண்
[ணே :

---

### 16. பெண்ணின் சிருட்டி.

(தொடர்ச்சி.)

நிலைமண்டில வாசிரியப்பா.

இன்னு மிதுபோ லேறுமா றுண
குணங்களைப் பெண்ணெனக் கூட்டிப் பிர
[மன்
அவ்விடம் வருந்திய வவன்கை கொடுக்க
அன்னவ னவளுடன் வாரமு மொன்று
நன்னய முடனே நயந்தபின் பிரமனைச்
சேர்ந்து 'நாதனே, சிறுமியோ டிருத்தல்
முடியா தாதலால் நீவிரே கொளு'மென,
அவரு மவனைத் தன்னிட மிருத்தினர் ;
பின்பொர் வாரஞ் சென்றபின் மனிதன்
விரும்பினன் கன்னியைப் பிரமனு மீந்
[தனன் ;
மூன்றே நாட்களில் முடியா தென்றம்
மனிதன் பெண்ணினை மறுபடி யனுப்ப,
பிரமன் 'பெயா, போடா. இவடனை
நீயே நிலையாக் கொள்க'வென் றனனே.

---

### 17. பெண்ணின் குணங்கள்.

நிலைமண்டில வாசிரியப்பா.

சந்திரன் விருத்தமும், லதைகளின் வளை
[வும்,
படர்கொடிக் கூந்தலின் பற்றுங் குண
[மும்,
புல்லின் நடுக்கமும், பூவின் மலர்ச்சியும்,
இலைகளை யொத்த விலேசாந் தன்மையும்,
துதிக்கையின் அவட்சியும், மானின் பார்
[வையும்,
சுரும்பின் தொகுதியிற் றோன்று கூந்த
[லும்,
வாயுவின் சலனமும், மலையின் றிரமும்,
முயலையு மொத்திடுங் கோழைத் தன
[மும்,
நெருப்பின் வெம்மையும், பனியின்
[தண்மையும்,
சூரிய காந்தியும், இரவி னிருளும்,
கோகிலக் குரலும், காக்கையின் சத்த
[மும்,
கொக்கின் கபடமும், கோதிலாச் சக்கர
வாகப் புள்ளெனு மாண்புறு மனமுங்
கூடி யிருப்பவள் பெண்ணெனக் கொள்
[ளே :

---

### 18. தந்தையர்க் கோர்விண்ணப்பம்:

நிலைமண்டில வாசிரியப்பா.

தந்தை யென்பவன் றன்மக னவையில்
முந்தி யிருந்திட முயல்வதே யுதவியாம்
என்றுமுன் வள்ளுவ ரியம்பிய தறிந்து
நன்றே விளங்கிடும் நயனம் போன்ற
கல்வியை மகர்க்குக் கனமாய்க் கெடுமின்,
அல்லெனு மவித்தை யறவே களைமின்.
புவிமிசைப் பொருளெனக் காசும் வீடும்
தவறிலா தீந்திடு தந்தையி னுயிர்தான்
மோகுமுன் விரையந் செய்வரே புத்தி
[ரர் ;
சாகிற வரையவற் சகாய மாவது
கல்வியே யென்பதைக் கருதுமின் தந்தை
[யீர் ;
சொல்லிய யாவுஞ் சோதிவா யுந்தன்
புத்திரி கட்கும் பொருத்தமா மென்று
சித்தந் தனிலே சிறந்தமைப் பீரே :

---

### 19. போரின்முடிவு.

நிலைமண்டில வாசிரியப்பா.

போரும் முடிந்தது புகழுடன் ; நல்லோர்
தோள்வலி யுலகினிற் றுலங்கி நின்றது ;
சீருஞ் செழிப்புஞ் சிறக்குநல் லறமும்
ஆள்வினை யோடு செய்திடச் சமயம்
வாய்த்ததைக் குறித்து மகிழ்ந்திடா யுல
[கே !

இதுவரை யிதுவெலா மியற்றுதற் கில்லா
விதமா யுலகின் வெங்கலி யென்ன
யுத்தப் படைகளை யொருங்கே சேர்த்த [வுன்
மத்த னடங்கினன் மகிழ்க, மகிழ்க,
10. இவ்வித மாய விசையினைத் தந்த
திவ்விய வருளைத் தொழுக, மேலும்
* ஆயிரத் தொளாயிரப் பதினெண் ணாண் [டின்
பதினொரு மாதப் பதினொரு தேதியின்
14. பதினொரு மணியைப் பதிமி னுளத்தே:

வி. சுப்பையர்.

* Hostilities Ceased at 11 A. M. on the 11th of the 11th month of 1918.

## How to Spend Leisure Hours.

BY MR. D. S. NESAMANI.

### விடுதிப் பொழுதைக் கழிக்கும் ஆறு.

(237-ம்பக்கத் தொடர்ச்சி.)

இவைமட்டுமல்ல; நூல்கள் அறிவையும் பெருக்குவன. அறிவு இயற்கையறிவு, செயற்கையறிவு என இருவகைப்படும். நிலம் வாழ்வன, நீர்வாழ்வன வான்வாழ்வனவாம் ஜீவவர்க்கங்களுள் மனதில் ஆதிக்கம்பெற்று விளங்குவது, அவன் தன் இயற்கை யறிவொடு செயற்கையறிவையும் அடைந்து புகழும் பெருமையும் இன்பமும் வாய்ந்து மேன்மையுறும் ஆற்றலுடையதாலென்க. ம்ருகங்களின் தேஹவமைப்பு மனிதனின் சரீரக் கட்டிற்குப் பெரிதும் ஒத்திருப்பினும், விலங்குகள் ஒன்றினறிவினல் பிற பயனடைய அநேகமாய் ஹேதுவில்லாதிருக்க, மநுஷ்யர் எழுத்துப் பயிற்சியையுமடைந்திருப்பதைப்பற்றி யோசிக்கில், ஆய்மதியுறுநர்தாமாராய்ந்தறிந்த ஸத்யங்களை மற்றையோர் அதிகக்காலம் செலவழியாமலும், மிகுந்த ஸங்கடமுறாமலும் உணர்ந்துய்யவேண்டுமென்பதே முதலடியில்லான் சித்தமென விளங்கும். எனவே, நூலோதுவது திருவருட் சித்தத்திற்கு இசைந்த கருமமென்பது வெளிப்படை. பூர்வம் மேற்கேயுள்ள பலஸ்தீன தேசமுழுவதும் 'ஆழியொன்றுருட்டி' த் தனியரசியற்றிய அரசனன ஸாலமோன் என்னும் மஹா ஞானியும், 'ஞானிகள் அறிவைச் சேர்த்து வைக்கின்றார்க' ளென்று புகன்றார்; மற்றும், 'அறிவுடையவன் தன் வலியைப் பெருக்குகின்றவன்' என்று சுருங்கக்கூறி அறிவுபெறல் எவ்வளவு அவசியமென்பதை விளங்கவைத்தார். 'அறிவையைத் திருடினல் விலங்கு, அறிவைத் திருடினல் ஆதாயம்' என்னுந் தமிழ்ப் பழமொழியையும் இதனுடன் ஒப்பிடுக. ஊன்றிப் பார்ப்பின், கடவுள் கருணையுடன் நமக்கீந்த எதையும் தகுந்த காரணங்களின்றி அநுபவியாதிருப்பது பெரும்பாபமென்பது விசதமாகும். ஆனல், மேதையர் ஆக்கிய நூல்களைக் கற்றுப் பயன் துவ்வாது காலத்தை வீணே செலவழிப்பது பாபமேயன்றோ?

"தொட்டனைத்(து) ஊறு(ம்) மணற்கேணி மாந்தர்க் [குக்
கற்றனைத்(து) ஊறு(ம்) அறிவு."

"மாந்தர்க்கெலாம் கேள்வியா(ல்) அறிவும்,
அறிவினற் கல்வியும், கல்வியாற் புகழும்,
புகழாற் பெருமையும் விளைந்து வளரும்."

சிறந்த புஸ்தகங்களைக் கற்கவேண்டிய அவச்யத்தைப் பற்றிச் சில குறிப்புக்களைக் கூறியபின், 'நூற்பயிற்சி செய்தற்குரியவர் எவ்வெவர்?' என்னும் வினவிற்கு விடையிறுத்தல் முறையாம். ஸ்வஸ்தபுத்தியுடைய மக்களனைவரும்—ஆண்பாலராயினும் பெண்பாலராயினும் ஸரி, வலியோராயினும் சரி, பெரியோராயினும் சரி, ஸந்தோஷ ரஹிதராயினும் ஸந்தோஷ ஸஹிதராயினும் ஸரி—எவ்வித ஆசங்கையுமின்றி நூல்களை ஆராய்ந்து மாண்புறலாம். இச்சந்தர்ப்பத்தில் காலத்தைநோக்கி 'மாதர்

நூற்பயிற்சி' யைப்பற்றி இரண்டொரு குறிப்புக்களை எடுத்துரைத்தல் 'மற்றொன்று விரித்தல்' ஆகாதென்பது ஒருதலை.

ஆண், பெண்பாலரிருவரும் செயற்கையறிவு பெறவல்ல ஜீவராசிகளானமையான் அவ்விருவரும், பெரும்பாலும் உள்ளதை உள்ளபடியே உணர்த்தி அறிவைப்பெருக்கும் நூற்கல்வியை அசட்டை செய்யாதிருத்தல் சிறப்பும் நியாயமுமாம். நூற்கல்வி ஆண்மக்களுக்கு எங்ஙனம் இன்றியமையாததோ, அங்ஙனமே பெண்மக்களுக்கும் இன்றியமையாததாம். நூற்பயிற்சி ஆண்பாலர்க்குப் பூஷணமாகில் பெண்பாலர்க்கும் பூஷணமாம். ஆடவரை நன்னெறியினின்று வழுவச் செய்யாதது கல்வியாயின் பூவையரைத் தீவழியில் கல்வி செலுத்துமோ?

"பொருந்துநல் கலைதெரி பூவை கற்பது
திருந்திய மிருமலாற் றேய்ந்து போமெனல்
வருந்திடா(து) உயிர்தரு(ம்) மருந்தை மானிடர்
அருந்திடின் சாவாரென்(று) அறைதல் ஒக்குமே"

"சிறைகாக்கும் காப்(பு) எவன் செய்யும் மகளிர்
நிறைகாக்கும் காப்பே தலை."

கல்வியறிவில்லார் ஏகதேசம் ம்ருகங்களுக்குச்சமானமானவர் என்பது நல்லோர் பலரின் அபிப்பிராயம். இவற்றை உணர்ந்துமுணராதும் கல்வியம்ருதத்தை மடந்தையர் அருந்தாவண்ணம் அவரைத் தடுத்தல் தந்நயங்கருதி தந்நலமிழப்பவர் செயல்.

ஜோஸப் ஆடிஸன் என்பவர் கூறியபடி, புருஷர் ஜீவனோபாயத்தின்பொருட்டு நாளின் பெரும்பாகம் வெளியேயிருக்க, ஸ்த்ரீகள் வீட்டிலே இருந்து, அட்டுண்டு மிகுந்த நேரத்தை வீணிற் செலவழிக்கின்றனர்; இவர்களுக்குப் பேசுந்திறமும் ஆடவருக்கு அமைந்திருப்பதைவிட அதிகமாதலால், இவர்கள் ஒழிவேற்பட்டதும் அயலகத்தாரிடம் நல்லவல்ல கூறிக் காலஹரணஞ் செய்கின்றனர். இவர்கள் கல்வியறிவு பெற்றிருப்பின் இவர்கள் தம் ஓய்வுபொழுதைப் ப்ரயோஜனகரமாகச் செலவழிப்பர் என்பதற்கு ஐயமுண்டோ?

சிலர், பெண்கள் இறந்த பிறப்பில் தாம் செய்த தீவினையின் பயனாக இப்பிறப்பிற் பெண்களாய்த் தோன்றினவராதலின், அவர்கள் ஆண்மக்களைப்போல் கற்று ஆண்களுக்கு ஸமமானவர்களாகக் கூடாது என்று கூறிப் பெண்கல்வியை விலக்க முயலுகின்றனர். இவர்கள் புகல்வது மெய்யெனக் கொண்டாலும், இக்காரணம் பற்றியே மாதர் கல்வியறிவு புகட்டப் பெற வேண்டியவர் என்பது நிஜம். தத்காலத்தில் தண்டனை தண்டிக்கப்பெறுபவரைச் சீர்ப்படுத்தத்தகுந்ததாயிருக்கவேண்டுமேயன்றி, தீமைக்குத் தீமை செய்கிறதாயிருத்தலொண்ணாதென்று நாகரிகமடைந்த தேசத்தார் அனைவரும் கவலைகொண்டிருக்கின்றனர். இங்ஙனம் ச்ருஷ்டிகளான மானிடர் நீதிசெய்ய அவாவுவார்களெனில், சர்வச்ருஷ்டிகனான ஞானஸம்பந்நன் பெண்களுக்கு இத்தகைய தண்டம் விதிப்பானோ? எனவே, இவர்கள் ஒழிவுநேரத்தில் பலகுற்றங்கள் புரிந்து இன்னும் இழிபிறப்படையாவண்ணம் இவர்களைக் காத்தல் ஹிந்து தேசவாஸிகளின்மேல் விழுந்த கடன்.

கீழ்க்கூறிய குறிப்புக்கள் பெண்களும் நூற்பயிற்சி செய்தற்குரியவர் என்று நாம் முன் கூறியதை நிரூபணஞ்செய்யப் போதுமானவை. ஆதலால், மடநல்லாரும் நூலோதுவது நலம் என்று கூறுதல் இழுக்குறாது. நிற்க.

இக்கல்வி கற்குங்கால் சிலஸமயங்களில் சிறிது துன்பந்தந்து, கற்றபின் மிகுதியும் இன்பந்தருவது; இம்மை அம்மை இரண்டிற்கும் ஸாதகமாகவுள்ளது. இக்கல்வி மனத்தெளிவைத் தந்து, லோக வ்யவஹாரங்களைச் செவ்வனே நடாத்தும் ஆற்றலை மானிடர்க்குத் தருதலால், இது, மக்கள்தம், அறிவாம் விளக்கை மங்கவிடாது ஜ்வலிக்கச்செய்யும் தூண்டுகோல். மற்றும், நாரிடத்துள்ள அறியாமையையும் புன்மையையும் அகற்றி, தெய்வ பக்தியையும் தண்ணளியையும் அவர்களிடத்தில் பெருக்கி, நன்னடக்கையையும் மானத்தையும் அவர்கள்பால் பொருத்தவல்லது கல்வியாதலால், அது அருமையான ஸஞ்சீவி. இதுபற்றியே, பொய்

யாமொழியார், "கண்ணுடையர் என்பவர் கற்றோர்; முகத்து இரண்டு புண்ணுடையர் கல்லாதவர்" என்றார். முனைப்பாடியாரும்,

"எப்பிறப்(பு) ஆயினும் ஏமாப்(பு) ஒருவற்கு
மக்கள் பிறப்பில் பிறி(து) இல்லை,—அப்பிறப்பில்
கற்றலும், கற்றவை கேட்டலும் கேட்டதன்கண்
நிற்றலும் கூடப் பெறின்."

எனவிண்டார். ஔவையும், "ஓதாதார்க்(கு) இல்லை உணர்வொடும் ஒழுக்கம்" என்றதை நாம் கவனித்தல் நன்மை பயக்கும்.

எனினும், நாம் நன்மை தரவல்ல நூல்களையே தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்; ஏனெனில், நாம் புஸ்தகங்களை வாசிக்கும்பொழுது நாம் ஏட்டுத்தொகுதிகளோடன்று, அவ்வேட்டுத் தொகுதிகளில் பல விஷயங்களை அடக்கின மநுஷ்யரோடு நாம் ஸஹவாஸஞ் செய்கின்றோம். பெரும்பாலும், மநுஷ்யர் எப்படிச் சிந்திக்கிறார்களோ அப்படியே எழுதுகின்றனர். எப்படி எழுதுகிறார்களோ அப்படியே நடக்கின்றனர். ஆதலால், நாம் ஸத்குணர் எழுதிய நூல்களை வாசிக்கையில் பாலோடளாய நீர் நீராய் நிறந்தெரிந்து தோன்றாது அப்பாலோடு ஒத்தல்போலவும், மலர்தொடுத்த வாழைநார் மணம்பெறுவதுபோலவும் நாம் நம்சிறுமையை இழந்து அப்பெரியார்பெருமையைப் போர்த்துக்கொள்ளத்தகுந்த யோக்யராவோம். நீர்மையுடையவரல்லாத கயவராக்கிய ஏட்டுத் தொகுதிகளிலுள்ள வாக்யங்களை வாசிக்குங்கால் நாம் அக்கயவரோடு கூடுகின்றோமாதலின், பன்றியுடன் சேர்ந்த கன்றும் பவ்வீத்தின்னத் தலைப்படுவதுபோல் நாமும் காலக்ரமத்தில் தேய்தலுறுவோம் என்பது திண்ணம். அமெரிக்க தேசத்து ஜே. ஆர். மில்லர் பண்டிதர் "ஒரு கெட்டபுஸ்தகம் எழுதும்மனிதன் தூய்மையல்லாதனவான சக்திகளாலான பவனியை என்றும் நடந்துகொண்டே இருக்கும்படி நிலைபெயரச்செய்கிறான்" என்றார். புஸ்தகங்கள் இவ்வளவு வல்லமையுடையன எனத் தேர்ந்தறிந்த மில்றன் என்னும் ஆங்கிலக்கவி "புஸ்தகங்கள் முற்றும் உயிரற்றவைகளல்ல" என்றார். "கண்டதைக்கற்க பண்டிதனாவான்" என்னும் முதுமொழி எதிர்மறைப்பொருள் தருதல் காண்க. எனவே, நாம் ஸ்நேஹிதரைத் தெரிந்துகொள்வதில் கொள்ளும் ஜாக்ரதை புஸ்தகங்களைப் பொறுக்கி எடுப்பதிலும் நமக்கு இருக்கவேண்டும்.

"மருவுக மாசற்றார் கேண்மை ஒன்(று) ஈத்தும்
ஒருவுக வொப்பிலார் நட்பு."

இப்படிக் கூறியதால் 'எவ்வெந் நூல்களைக் கற்கலாம்?' 'எவ்வெவ்வற்றைக் கற்கலாகாது' என்ற கேள்விகள் பிறக்கலாம். இவற்றிற்குத் திட்டமாய் ப்ரத்யுத்தரங்கள் அளிப்பது அரிது. ஒருவர் விரும்பும் புஸ்தகங்கள் பலர்க்குத் திருப்தியைத் தரா. ஆகவே, நூல்பயில உன்னுவார் கற்றறிந்த ஆன்றோர் உதவிகொண்டு தம்மனநிலைக்குகந்த புஸ்தகங்களைத் தேர்ந்தெடுத்துக் கற்கவேண்டும்.

(இன்னும் வரும்.)

தா. ஸா. நேசமணி.

## இலக்கணவாராய்ச்சி.

[தமிழ் மாணவரொருவர் எழுதியது.]

"சித்திர வண்ண, நெடியவுங் குறியவு நேர்ந்துடன் வருஉம்" என்னுந் தொல்காப்பியச்செய்யுளியற் (222) சூத்திரத்திற்கு உரை செய்த மதுரையாசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியரும் "நிரனிறை முதலிய" என்னும் யாப்பருங் கலவிருத்தி ஒழிபியற் (2) புறனடைச் சூத்திரவுரையில், "அம்மை முதலிய வாயிரு நான்மையும், வண்ணமும்" என்னும் பகுதிக்குக் குணசாகரமுனிவரும் "சித்திர வண்ணமாவது நெட்டெழுத்துங் குற்றெழுத்

தும் ஒப்பவிராய்வரும்" என்று பொருள் கூறியிருத்தலைப் பதிப்பாசிரியரிருவரும் அறிந்து வைத்தும் "ஊர்வாழி" என்னும் உதாரணச் செய்யுளை ஏட்டுப்பிரதியிலுள்ளவாறே ஒழுங்காகப் பதிப்பிக்க அறியாது மனம்போனவாறு திரித்து மாறுபடப் பதிப்பித்துள்ளார்கள்; ஆயினும், உரையாசிரியர் இருவர் கருத்தையும் தமிழ்மக்கள் விளங்க அறிந்து உவக்கும் வண்ணம் ஈண்டு வெளியிடலாயிற்று:—

"ஊர வாழி யூர தேர
தார வாசி (1) பேர சேரி
(2) கார வேரி ரைய வாரி
பீர நீர தோழி தோளே."

(பி-ம்.) (க) ஏர சேரி, கார வேறிரைய. (உ) (1) காரிரையவாரி. (2) சாரலரிதோயவாதிபீர.

---

# The Lost Will.

BY MR. M. S. KRISHNASAMY IYER.

## காணாமற்போன மரணசாஸனம்.

### 10-ம் அத்தியாயம்.

பரீக்ஷை முடிந்ததும் நீலகண்டன் தனது மாமன் ஊருக்குப் புறப்பட்டான். அவன் புறப்பட்ட இரண்டு நாட்களுக்குமுன் துரைசாமி வீட்டுக்குப்போய் பார்வதியைப் பார்த்தான். பார்வதியின் கலியாணம் இன்னும் நிச்சயமாகவில்லை. பலவரன்கள் வந்துகொண்டிருந்தன. ருக்மணியம்மாளுக்கு மாத்திரம் பார்வதியை நீலகண்டனுக்கே கொடுத்துவிடவேண்டுமென்றிருந்தது. சாம்பசிவ ஐயரோ பல விதங்களிலும் மனங்கலங்கியிருந்தார்; நீலகண்டன் பரீக்ஷையில் தேறிவிட்டால், தக்கவர்களைக் கொண்டு சிபார்சு செய்வித்து அவனுக்கு ஒரு வேலையை ஸம்பாதித்துக் கொடுத்து, அவனுக்கே தமது பெண்ணையும் கொடுத்துவிடலாமென்றிருந்தார். ஆனால், அதற்குள் வேறு ஏதாவது நல்ல வரன் கிடைத்தாலும் பார்த்துக் கொள்ளலாமென்றிருந்தார். ராமய்யரிடமிருந்து வந்த கடிதம் அவ்வளவு திருப்திகரமாக இல்லை. அவரிடமிருந்து ஜாதகமும் வந்தது. ஆனால், இப்பொழுது முதற்கொண்டே நீலகண்டனுக்குக் கல்யாணம் செய்துவைப்பது தமது தங்கைக்கு இஷ்டமில்லையென்று தெரிவித்திருந்தார்.

சுந்தரமய்யரிடமிருந்து இரண்டு கடிதங்கள் கிடைத்தன. முதலில் வந்த கடிதத்தில் தாம் உயில் விஷயமாய்ச் சில விசாரணைகள் செய்து வருவதாயும், பிறகு வந்த கடிதத்தில், தம்மால் ஒன்றும் செய்வதற்கில்லையென்றும் அதைப் பற்றி முயற்சிப்பது வீண் என்றும் அவர் எழுதியிருந்தார். அக்கடிதங்கள் கிடைத்ததும், நீலகண்டனும் துரைசாமியும் இனி உயில் விஷயத்தில் கவலைகொள்வதில் பிரயோஜனமில்லையென்று அதைத்தங்கள் மனத்தினின்று நீக்கிவிட்டார்கள்.

நீலகண்டன் ஊருக்குப் போய்ச்சேர்ந்ததும் அவன் மாமன், மாமி, தாயார் முதலானவர்கள் அவனை அன்புடன் வரவேற்று உபசரித்தார்கள். அவன் மாமிகூட அவனிடத்தில் அதிகப் பிரியங்காட்டினாள். அவன் ஊருக்குவந்து சில நாட்களானதும், சுந்தரம்மாளுக்கு முறைஜ்வரம் கண்டது. ஸாதாரண ஜ்வரமாயிருக்குமென்று ஸ்வல்பமாக வைத்தியம் செய்யப்பட்டு வந்தது. அதில் ஒன்றும் பலிக்கவில்லை. பக்கத்தூர் வைத்தியனைக்கொண்டு வைத்தியம் செய்வித்தும், அவள் தேகம் மெலிந்துகொண்டேதான் வந்தது. வரவர சுந்தரம்மாள் தேகம் துரும்புபோலாயிற்று. அற்ப காரியத்தைக் கூடச் செய்ய அவளுக்குச் சக்தியில்லாமலிருந்தது. அவளுடைய அந்திகாலம் இந்தவாரமோ அடுத்தவாரமோ என்று எண்ணும்படியிருந்தது. அவள் படுத்தபடியேதான் இருந்தாள்.

இந்தக் கஷ்டத்தோடு, தன் புத்திரன் நிர்க்கதியாகிவிடுவானோ என்ற எண்ணம் அவளை வருத்திற்று; அவனுக்குக் கல்யாணம் செய்வித்துப் பார்க்கக் கொடுத்துவைப்போமா என்று ஏங்கினாள். தன் உடன்பிறந்தான் நீலகண்டனை ஆதரிக்கமாட்டானென்ற பயம் அவளைச் சூழ்ந்துகொண்டது.

இப்படி அவள் துன்பப்பட்டுக்கொண்டிருக்கையில், கல்யாணபுரத்தில் ஒரு வைத்தியர் இருக்கிறார் என்றும், அவர் மகா சமர்த்தர் என்றும் ராமய்யர் கேள்விப்பட்டார். அங்கே சுந்தரம்மாளை அழைத்துக்கொண்டுபோய் வைத்தியம் பார்க்கிறதென்று நிச்சயித்துத் தாமும் தமது மனைவி, சுந்தரம்மாள், நீலகண்டன் ஆகிய எல்லோருமாகப் புறப்பட்டு அவ்வூர் போய்ச்சேர்ந்தார்கள். குப்பா சாஸ்திரிகள் அவ்விடத்தில் அவர்களுக்கு வெகு ஆதரவாயிருந்தார். அவருக்கு அதிக வயதாகிவிட்டதென்றாலும், நீலகண்டன் மேலுள்ள வாஞ்சையால் வைத்திய விஷயமாய் வெகுவாய் அலைந்தாரென்று சொல்லவேண்டும். அவ்வூர்ப்பழக்கம் அதிகமில்லாத ராமய்யரும், நீலண்டனும் குப்பாசாஸ்திரிகள் இல்லாவிட்டால் திண்டாடவேண்டியிருக்கும். அவ்வூர் ஸ்திரீகளுள் பலர் சுந்தரம்மாளுக்குப் பலவகைகளிலும் உதவி செய்தார்கள். அவர்களுள் சுந்தரத்தினிடம்—அவள் பாக்கியவதியாயிருந்தபோது—வாங்கிச் சாப்பிட்டபேர்கள் அநேகர். அவளுடைய குணத்துக்குச் செய்தபேர்கள் அநேகர்.

நடேசய்யர் வைத்தியத்தில் பேர்போனவர். அவர் பார்க்காத வைத்திய நூல்கள் எவையுமில்லையென்று எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். அவருக்கு மாந்திரீகமும் கொஞ்சம் தெரியுமாம். ஜோதிஷத்திலும் கொஞ்சம் பரிச்சயம் உண்டு. வியாதிஸ்தர்களிடம் வெகு பிரியமாய்ப் பேசுவார். எட்டிக்காயைப்போல் கசக்கும் மருந்தையும் சிறுவர்கள் பிரியமாய் உண்ணும்படி செய்துவிடுவார். அவருக்குக் கைராசியுமுண்டு. அவர் ஏதோ வேண்டுதலுக்காகத் தன் தலைமயிரையும் தாடிமீசையையும் வளர்த்துக்கொண்டிருந்தார். எப்போதும் ஒரு பெரிய காவி அங்கியையே அவர் உடுத்திக்கொண்டிருப்பார். அவருக்குக் கண் சற்று சாளேச்வரமாயிருந்தபடியால், அதற்காக ஒரு கண்ணாடியைப் போட்டுக்கொண்டிருந்தார். தனிமையாகவே அவ்வூரில் அவர் வாஸம் செய்துகொண்டிருந்தார்.

குப்பா சாஸ்திரிகள் அவரைக்கண்டு சுந்தரம்மாளுக்கு வைத்தியம் செய்யும்படி கேட்டுக்கொண்டார். அவர் சாஸ்திரிகளுடன் புறப்பட்டு வந்து சுந்தரம்மாளைப் பார்த்தார். வியாதி மிகவும் கடுமையானதுதானென்றும், ஆனால் ஒரு வாரத்திற்குள் குணப்படுத்தக்கூடுமென்றும், அது தப்பினால் ஒரு மாதகாலமாகுமென்றும், அதுவரையில் எவரும் அதைரியம் கொள்ளக்கூடாதென்றும் அவர் சொன்னார். அவருடைய வைத்தியத்தில் தைரியம்தான் பிரதானமாம். தைரியமிருந்தால் எவ்வித வியாதிகளையும் போக்கிவிடலாமென்பது அவருடைய கொள்கை. ஆகையால், எந்த விதமான விசாரமும் சுந்தரம்மாள் மனதில் வைத்திருக்கக்கூடாதென்றும், எல்லா கவலைகளையும் ஈச்வரன் மேல் பாரம் போட்டுவிட்டு நிர்மலமான மனத்தோடு இருக்கவேண்டுமென்றும் வைத்தியர் கூறினார்.

இவர்களின் குடும்ப யோகக்ஷேமங்களைப் பற்றிச் சிறிதளவு குப்பா சாஸ்திரிகள் வைத்தியரிடம் தெரிவித்திருந்தார். இதனால்தான் வைத்தியர் கவலை கூடாதென்று முதலிலேயே சொன்னார். பிறகு சுந்தரம்மாளுக்கு வைத்தியர் நாலுவேளைக்கு மருந்து கொடுத்துவிட்டுத் தம் வீடுபோய்ச் சேர்ந்தார்.

வைத்தியர் வந்த சமயத்தில் நீலகண்டன் வீட்டில் இல்லை. அவன் வீடு திரும்பினதும், வைத்தியர் வந்து போனதையும் அவர் சொன்ன விஷயங்களையும் அறிந்து சந்தோஷமடைந்தான். அன்று பிற்பகல் தானே வைத்தியரை நேரில் கண்டு வியாதியைப் பற்றித் தம் அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கேட்க எண்ணி

ஞன். ஆனல், அவன் அவரை அன்று சாயங்காலந்தான் பார்க்க முடிந்தது. அவர் அச்சமயம் அவ்வூர்க் கால்வாயில் சந்தியாவந்தனம் செய்துகொண்டிருந்தார். அவர்தான் வைத்தியரெனக் கேட்டுத் தெரிந்துகொண்டு, நீலகண்டன் அவரையணுகி, "நீங்கள்தான் வைத்தியர் நடேசய்யர்வாளோ?" என்று கேட்டான்.

நடேசய்யர்:—ஆம். நான்தான். ஏதாவது விசேஷம் உண்டோ?

நீலகண்டன்:—காலையில் என் தாயாருக்கு நீங்கள் வைத்தியம் பார்த்தீர்களே; அது விஷயமாய்க் கண்டுபோகலாமென்று வந்தேன்.

நடேசய்யர்:—ஏன்? ஏதாவது உடம்பு சரிப்படவில்லையோ? ஆத்துக்குப் போகும்போது வந்து பார்க்கிறேன்.

நீலகண்டன்:—நீங்கள் வரவேண்டியதில்லை. மருந்து சாப்பிட்டுக்கொண்டிருக்கிறள். பகலில் கூட உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தாள். அவள் தேஹஸ்திதி எப்படியிருக்கிறதென்பதையும், சிக்கிரத்தில் குணமாய்விடுமா வென்பதையும் கேட்கலாமென்று வந்தேன். தங்களுடைய உண்மையான அபிப்பிராயத்தை நான் எதிர்பார்க்கிறேன்.

நடேசய்யர்:—நீ இப்போது கேட்ட விஷயங்களைக் காலையிலேயே சொல்லிவிட்டேன். அவற்றைத் தவிர சொல்லுவதற்கு வேறு ஒன்றும் இல்லை. எப்படியும் தேஹம் குணமாக ஒரு மாதம் செல்லும். இதில் மனோவியாதியும் கலந்துகொண்டிருக்கிறதென்று தெரிகின்றது. வீணுகக் கவலைப்படாமலிருந்தால் சிக்கிரம் குணம் ஏற்படலாம்.

"மனோவியாதியும் உண்டுதான்" என்று நீலகண்டன் சொல்லிவிட்டுத் தனது குடும்ப யோகக்ஷேமங்களுள் சிறிதளவு வைத்தியரிடம் தெரிவித்தான்.

"எப்படியாவது சொஸ்தப்படுத்திவிட்டால் தேவலை. எனக்கு என் தாயாரைத்தவிர வேறு கதி கிடையாது. இந்த வருஷம் எனக்குப் பரீக்ஷை தேறிவிட்டால், ஏதாவது ஒரு வேலையைப்பார்த்துக்கொள்வேன்; பிறகு பயமில்லை."

"என்னலானதைப் பார்க்கிறேன். சீக்கிரம் குணமடையுமென்றுதான் எனக்குத் தோன்றுகிறது. கவலைப்படாமலிருப்பது நல்லது. எல்லாம் ஈசுவரன் செயலென்று இருக்கவேண்டும்."

நீலகண்டன் அவரிடம் விடைபெற்றுக் கொண்டு வீட்டுக்குப் புறப்பட்டான். வைத்தியரை எங்கேயோ பார்த்தாற்போலிருக்கிறது. ஆனல் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை: அதனல் அவரிடம் அவனுக்கு ஒருவித பிரியம் ஏற்பட்டது. அவர் மகா வைதீகரென்றும், மாந்திரீகம் தெரிந்தவரென்றும் நீலகண்டன் கேள்விப்படவே, அவர்மேல் அவன் மிகுந்த விசுவாசங்கொண்டான். அவரை ஒருநாள் "எந்த ஊர்" என்று அவன் கேட்க, அவர் சேலம்ஜில்லா என்று மறுமொழி கூறினர். அவரை எங்கேயோ பார்த்ததுபோலிருக்கிறதே என்று அவன் மீண்டும் கூறினன். அதற்கு அவர், சேலம் கோயமுத்தூருக்கு வந்ததுண்டா வென்று அவனைக் கேட்டார். நீலகண்டன் அந்தப் பக்கங்களிற் போனதேயில்லை.

நாளாவட்டத்தில் சுந்தரம்மாளுக்குக் குணம் ஏற்பட்டது. இருந்தாலும், அவளுடைய மனோவியாதி மாத்திரம் அவளை விட்டகலவில்லை. பழைய கதையை நீலகண்டன் அவளுக்கு ஞாபகப்படுத்தியதுமுதல்—அதாவது உயில்விஷயமாய் அவன் கடிதமெழுதி கேட்டதுமுதல்—அவள் அதேநினைவாய்க் கவலைகொண்டிருந்தாள். என்ன சொல்லியும் அவள் மனம் அமைதியடையவில்லை.

(இன்னும் வரும்.)

எம். எல். கிருஷ்ணசாமி ஐயர்.

# செந்தமிழ்ச் சான்றோர்.

[பண்டிதர் பு. க. ஸ்ரீநிவாஸாசாரியர் எழுதியது.]

பண்டைக்காலத்துச் செந்தமிழ்ச் சான்றோர்கள் இயற்றியருளிய செய்யுள்களெல்லாம் பொய்யுறு கற்பனைகளின்றி, பெரும்பாலும் உவமையணியே ஆங்காங்கு அமைந்து, இயற்கை நவிற்சியாகப் பொருந்தியுள்ளன. "நவில்தொறும் நூல்நயம்போலும்" எனும் பொய்யாமொழியார் திருவாக்கிற்கு அவற்றைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கூறலாம். அத்தமிழ்க் கவிஞர் எடுத்துரைக்கும் சீரிய கருத்துக்கள் கற்போருளத்தைக் கொள்ளைகொள்வன. பிற்காலத்து ஆசிரியர்கள் சிலர் மிடுக்கான சொற்களை ஆடம்பரமாகப் பொழிந்து முடுக்கான விருத்தங்கள் பாடுவதுபோல் அவர்கள் பாடுவதில்லை. அவர்கள் நோக்கம் பொருள்வளத்திலேயேயன்றிச் சொல்லாடம்பரத்திலன்று. ஆயினும், அவர்கள் செய்யுள்களிலமைந்த சொற்கள் சுருங்கி இன்னொலியமைந்து இயற்கையாயுள்ளன. பெரும்பாலும் சொற்களெல்லாம் இரண்டுமூன்றெழுத்துக்களாலானவையே. சொற்கள் அவர்கள் காலத்தில் வழங்கியன; அவற்றுட்சில இக்காலத்து வழக்காறொழிந்தன. ஆதலின், அத்தகைய சில சொற்களுக்குப் பொருள் விளங்குதல் அரிதேயன்றி, பிறசொற்களுக்கெல்லாம் பொருள் எளிதில் விளங்கும். திரிசொற்களைப் பிரயோகித்து நடையைக் கடுமையாக்கவேண்டுமென்பது அவர்கள் கருத்தன்று. இன்னொலிக்காக அளபெடைகள் அழகாக ஆங்காங்கு வருகின்றன.

அறுவகைத் தொகைநிலைகளும் அமைந்து வருதலால், அவர்களது பாக்கள், சுருங்கச் சொல்லல் என்னும் முதன்மையழகு வாய்ந்துள்ளன. பிராசம், முற்றுமோனை முதலிய சொல்லணிகள் இயற்கையாக வருவனவே. சிரமப்பட்டு அவர்கள் அவற்றை அமைப்பதில்லை. தாம் குறித்த பொருளை இயற்கையழகு பொருந்தச் சொல்வதற்கு மோனை, எதுகை முதலியன தடைசெய்வனவாயின், அவற்றைக் கைக்கொள்ளாது விடுப்பர். அங்ஙனமே, பொருள்வளத்தைக் கருதிச் சீர், தளை முதலியவற்றைப்புறக்கணித்தலும் உண்டு. எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண்கீழ்க்கணக்கு முதலிய நூல்களில் இங்குக்குறித்த இச்சிறப்பியல்புகளை இடந்தொறும் இடந்தொறும் காணலாம். அவர்கள் இயற்கையேயே இனிமையாக எடுத்துரைப்பவர்கள் என்பதற்கு உதாரணமாக, நக்கீரர் என்னும் சான்றோர் இனிமையாக உரைத்தருளிய கார், கூதிர்க்கால வர்ணனையொன்றை இங்குச் சுருக்கமுறப் பொழிப்புரையாகக் காட்டுவோம்.

## கார், கூதிர்க்கால வர்ணனை.

மேகம், உலகமெல்லாம் குளிரும்படி தான் கிடந்த மலையை வலமாக வளைந்து எழுந்திருந்து, கார் காலத்தில் மழையைப் பெய்தது. மழை வெள்ளத்தை வெறுத்த இடையர்கள் காளைகளையும், பசுக்களையும் மேட்டு நிலமாகிய முல்லை நிலத்துக்குக் கொண்டுபோய் மேயவிட்டனர். அவர்கள் தாம் பழகிய நிலத்தை விட்டுப்போகின்ற தனிமையினால் வருத்தமுற்றனர். காந்தளிதழ்களாற் கட்டிய அவர்கள்மாலை நீர் அலைத்தலாலே கலக்கமுற்றன. அவர்கள், பெரிய குளிர் உடலை வருத்துதலால், பலருங் கூடிக் கையை நெருப்பிலே காய்ச்சி, அதிற்கொண்ட சூட்டைக் கன்னத்தில் ஒற்றிக்கொண்டார்கள்; பற்கள் பறைகொட்ட நடுங்கினர். மிருகங்கள் மேய்தற்றொழிலை மறந்தொடுங்கின.

மரங்களிலே தங்குவனவாகிய பறவைகள் காற்று மிகுதியால் மேலிருந்து நிலத்தில் விழுந்தன, பசுக்கள், மிக்க குளிரால், கன்றைக் கொடுமையாக உதைத்து, ஏற்றுக்கொள்ளாதொழிந்தன. முசுட்டையென்பதன் வெள்ளிப்பூ பொன்போன்ற நிறத்தையுடைய பீர்க்குடனே சிறுபுதர்கள்தோறும்விரிந்தன. விரை

ந்தோடின நீரினின்றும் ஒருகால்பற்றிக் கயல் மீன்கள் அற்றநீர்க்கெதிரே வருதலாலே, மழையாலே வருந்தி அது சிறிது விட்டவளவிலே எழுந்து பறந்த கொக்கின் கூட்டம் நாரைகளுடன் கரிய வண்டலிட்ட சேறு பரவிய வெண்மணலாகிய எவ்விடங்களிலுமிருந்து அக்கயல்களைத் தின்றன.

மழை பெய்தபின்னர் வெள்ளிய மேகம் ஆகாயத்தில் சிறு தூற்றலாகத் தூவக்கற்றன. நெற்பயிரினின்று புறப்பட்ட கதிர்கள் முற்றி வளைந்தன. பாக்குமரத்தின் கழுத்தில் பாளை விரிந்த தாறுகளில் பசுங்காய்கள் வீங்கி இனிமையாக முற்றின. சோலைகள், குளிர்ந்த கொம்புகளை உடையனவையாய், அவற்றில் ஏற்றுநின்ற மழைத்துளிகள் இடைவிடாமல் விழப்பெற்றன. தேகபலமுடைய மிலேச்சர் கள்ளையுண்டு களித்துச் சிறு மழைத்துளிக்கு அஞ்சாமல், முன்னும் பின்னும் தொங்கவிட்ட வஸ்திரங்களை உடையவர்களாய்த் தமக்கு வேண்டிய இடத்தில் திரிந்தனர். மகளிர் அந்திக்காலத்துக் கடவுட்பூஜைக்கு அழகிய தட்டிலே இட்டுவைத்த பிச்சியென்பதன் பக்குவமான அரும்பினிதழ்கள் பகற்பொழுதைக் கடந்து விரியும் சமயத்தில் பரிமளித்தலால், அந்திக்காலமென்று அறிந்தனர். [கூதிரால் இரவும் பகலும் தெரியவில்லையாதலால், அந்தப் பூமலர்வதைக் கண்டே அந்தியென்றறிந்தனர்] இராக்காலமும் பகற்காலமும் தெரியாமல் மயங்குதலால், வீட்டிலே இருக்கும் ஆண்புறுக்கள் தம் பெண்புறுக்களோடு வீதியிலே சென்று இரைதேடியுண்ணாமல், செய்கையற்று இருப்பிடத்திலேயே பறவாதிருந்தமையால் கடுத்த கால் ஆறும்படி அதனை மாற்றி மாற்றியிருந்தன.

பெரிய வீடுகளில் சிறிய வேலைக்காரர்கள் சாந்தம்மியிலே கஸ்தூரி முதலியனவற்றைக் கூட்டி அரைத்தனர். வடநாட்டார் கொணர்ந்த சந்தனக்கல்லும், தென்திசைச் சந்தனமும் பயன்படாமற் கிடந்தன. மகளிர் மிக்க குளிரால் தம் குழலில் மலர்மாலையிட்டு முடிக்காமல், தம் பலவாகிய கரிய மயிரில் மங்கலத்திற்காகச் சிலமலரிட்டு முடித்தல்வேண்டி, மயிர்ச் சந்தனமாகிய விறகிலே நெருப்பையுண்டாக்கி, அதிலே அகில் முதலியனவற்றைக் கூட்டிப் புகைத்தனர். ஆலவட்டம் என்னும் விசிறிகள் உறையிடப்பட்டு, சுவரில் அடித்த ஆணிகளில், சிலந்தியினது வெள்ளிய நூலால் சூழப்பட்டுத் தூங்கின. உயர்ந்த வீடுகளில் மேல்நிலத்தில் (மெத்தையில்) இளவேனிற்காலத்தில் தூங்கும் படுக்கைக்குத் தென்றற்காற்றைத் தரும் சாளரத்தில் நின்று உலாவக்கூடாமல், இரண்டு கதவும் தாளிட்டுக் கிடக்கும்படி, ஓசையுடைய சிறுதுளிகளை வாடைக்காற்று எங்கும் வீசிற்று.

இங்ஙனம் குளிர்காலமாதலால், இளையோரும் முதியோரும் கரகத்தில் தண்ணீரைக் குடிக்கவில்லை; ஆனால், தூபமுட்டியில் இட்ட நெருப்பின் வெம்மையை உண்டனர். ஆட்டத் தொழிலையுடைய மகளிர் தாம் பாடுகின்ற பாட்டை வீணை தன்னிடத்திலே கொள்ளும்படி நரம்பைச் சுருதிகூட்டுதற்குத் தொடங்கினர். ஆயின், குளிர்ச்சியினாலே இனிய குரலாகிய யாழின் நரம்பு தன்னிலை குலைந்திருந்தது. ஆதலால், அதை அவர்கள் தம் மார்பின் வெப்பத்தில் தடவிக்கொண்டு, வீணையைப் பண் நிற்கும் முறையிலே நிறுத்தினர்.

இங்குக் குறித்த கார், கூதிர்வர்ணனையில் பொருந்தாததெதுவும் இன்மையையும், அழகிய கருத்துக்கள் உள்ளம் வியக்கும்படி அமைந்திருத்தலையும் அன்பர்கள் கூர்ந்து கவனிக்க. பொருளழகையே இங்குக் குறித்தோம் சொற்சுருக்கமும், சொல்லினிமையும் அன்பர்கள் செய்யுளிற் கண்டுகொள்க. இது, நக்கீரர் பாடிய நெடுநெல்வாடை என்னும் பாட்டினின்று எடுக்கப்பட்டது.

# கருவேலமரம்.

[பண்டித வி. சுப்பிரமணிய ஐயர் எழுதியது.]

(239-ம் பக்கத் தொடர்ச்சி.)

## தழைகளின் உபயோகம்.

கருவைத்தழை மிகவும் துவர்ப்புள்ளதாதலால், இத்தழை படிந்த நன்செய்ப்பயிர் நிலங்கள் மிகுந்த வலிவையடைகின்றன. ஆகவே, இம்மரத்தில் சிலவற்றை நன்செய் நிலங்களின் வரப்புக்களில் பயிரிட்டு, அவற்றின் தழைகளை வயலுக்கு உபயோகிப்பது சிறந்தது. உரத்திற்காக ஆடுகளை வளர்க்கும் வியவசாயிகளுக்கு ஆடுகளுக்குப் புஷ்டிதரும் உணவாய் இம்மரத்தின் தழை உபயோகப்படுகின்றது. வேலமரத்தின் கொழுந்துகளைச் சேகரித்து இராக்காலங்களில் தூங்கும்போது மனிதர் கண்களில் வைத்துக் கட்டிக் காலையில் அவிழ்க்க, கண்களிலுள்ள தீராத ரோகங்களெல்லாம் தீர்ந்து, அவை நல்ல பார்வையடைகின்றனவென்று வைத்திய சாஸ்திரம் கூறும்.

## முட்களின் உபயோகம்.

"கருவைக்கு முள்கட்டுவாரு முண்டோ" என்பது ஒரு பழமொழி. கருவைமரம் முள்மரமாயிருப்பதனால், இப்பழமொழி யுண்டாயிற்றென்பர். நன்றாக வளர்ந்த முட்கள் கூருள்ளவையாய் நீண்டிருக்கும். ஒரு விரலளவு நீண்ட முட்கள் அடிமுதல் நுனிவரையில் நன்றாக வெளுத்திருக்கும். இம்முட்களுடன் கூடிய கிளைகளைத் தறித்துத் தோட்டங்கள், வயல்கள் முதலியனவற்றிற்கு வேலியாக உபயோகிக்கலாம். இத்தகைய வேலிகள் போட்ட இடங்களிலெல்லாம், முட்கள் நிரம்பியிருக்கும். இவ்வேலிகளை வருஷந்தோறும் புதுப்பிக்கவேண்டும்.

## பற்குச்சிகள்.

இம்மரமானது நார் மிகுதியாகக்கொண்டது. ஆகவே, இந்தியவாசிகள் இதன்குச்சிகளை ஒடித்துப் பற்களினால் கடித்து, பிரஷ் (Brush) போல ஆக்கிக்கொண்டு, அவற்றால் தம்பற்களைத் துலக்குகின்றார்கள். பட்டணங்களில் இப்பற்குச்சிகளுக்கு மிகுந்த கிராக்கியுண்டு. இப்பற்குச்சியைக்கொண்டு, பற்களைத் துலக்குவதனால் தந்தரோகங்கள் பல நீங்கித்தந்தங்கள் வலிவை அடைகின்றன.

## மரப்பட்டையின் உபயோகம்.

வேலமரத்திலிருந்து பட்டைகளை எடுத்து உலர்த்தி, உரலிலிட்டு இடித்து, வஸ்திரகாயம் செய்து, கற்பூரம் முதலிய சில கடைச்சரக்குகளைப் பொடி செய்து சேர்த்தால் சிறந்த பற்பொடியாகின்றது. சில சமயங்களில் வேலமரத்தின் காய்களும் பொடிசெய்யப்பட்டு மேற்சொன்ன பற்பொடியோடு சேர்க்கப்படுகின்றன.

இம்மரத்தின் பட்டைகள் மிகவும் துவர்ப்பாதலால், அவை தோல்பதனிட மிகவும் உபயோகமாகும். இப்பட்டைகளைக் கொண்டு பதனிட்ட தோல்கள், வலிமையாயும், வழவழப்பாயும், கருநிறமாயும் இருக்கின்றன.

## மரத்தின் உபயோகம்.

வேலமரமானது இந்திய வியவசாயிகளுக்கு மிகவும் இன்றியமையாததாகும். வியவசாயக் கருவிகள் அனைத்தையும் குடியானவர்கள் இம்மரத்தினாலேயே செய்துகொள்வார்கள். வியவசாயிகளின் கலப்பை, ஏர்க்கால், பழுவு முதற்கொண்டு எல்லாக் கருவிகளும் இம்மரத்தைக் கொண்டே செய்யப்படுகின்றன. இம்மரத்திலிருந்து அறுத்த பலகைகள், வீடுகள் கட்டும்போது பலவழிகளில் உபயோகப்படுகின்றன. நிலத்தைச் சமன்செய்ய உபயோகிக்கப்படும் பரம்படிக்கும் பலகைகளும் இவற்றைக்கொண்டு செய்யப்படலாம். இம்மரத்தின் அடிப்புறம் சுற்றளவில் கொஞ்சம் பருத்தும் வலுத்துமிருந்தால், இதனால் உரல்களும் குந்தாணிகளும் செய்யப்படலாம்.

## மரத்தின் பால்.

வேலமரத்தினின்று ஒருவகைப் பால் வடிந்து மரத்தின்மீதே கெட்டியாய்விடுகின்றது. மிகவும் செழுமையான மரங்களினின்றே இப்பால் வடிந்து, சிவப்பான பளிங்கு நிறத்தை அடைந்துமரத்தின்மீதேஉறைந்துவிடுகின்றது. இப்பால் பிசின்போன்று பலகாரியங்களுக்கும் உபயோகப்படுவதனால், இம்மரங்களைக் காடாக வளர்ப்போர் கத்தியினால் இப்பிசினைச் சுரண்டிச்சேர்த்து, வியாபாரப் பொருளாக்கி அதினின்றும் மிக்க ஊதியம் பெறுவார்கள். மரத்தினின்று இப்பிசினை எடுக்கும்போது அழுக்கும் மரச்சக்கையும் அதோடு வருவதனால், உபயோகிப்பவர்கள் அதை ஜலத்தில் ஊறவைத்து வடிகட்டி எடுத்துக்கொள்வார்கள். அப்போது அது சுத்தமான பிசினாகின்றது. கவர்ன்மெண்டுசாலைகள் பலவற்றுள்ளும், இன்னும் வியாபாரச் சாலைகளிலும் உறைகள் செய்தல் முதலிய காரியங்களெல்லாம் இதைக்கொண்டே செய்யப்படுகின்றன. இங்கி காய்ச்சும்போதும் அதில் கொஞ்சம் வேலம் பிசின் சேர்க்கப்படுவதுண்டு.

## மாடுகளுக்கு உணவு.

வேலமரத்தின் தழைகளையும் காய்களையும் மாடுகளும் விரும்பி உண்கின்றன. இளைத்துப் போன பசுமாடுகள் இவற்றை ஆகாரமாக உட்கொண்டால், பருத்திக்கொட்டை உட்கொண்டவைபோல் நன்கு வலிவையடைந்து சதைப்பற்றை அடைகின்றன. இவ்விதைகளை உண்ணும் மாடுகள் மிகுதியான பாலைக் கொடுக்கின்றன. அதினின்று அதிகமான வெண்ணெயும் உண்டாகின்றது. வேலங் காய்களை உட்கொண்ட மாடுகள் சாணத்துடன் அவ்விதைகளைக் கழிக்க, அவ்வுரத்துடன் சேர்ந்த அவை மிக்க வீர்யத்துடன் செடிகளாய்க் கிளம்புகின்றன.

## வெள்வேலன்.

வெள்வேல மரத்தின் தழைகள் காய்கள் முதலியன கருவேல மரத்திற்கு இருப்பன போலவே யானாலும், மரத்தின் பட்டைகள் மட்டும் வெளுத்திருக்கும்.

கருவைமரங்கள் பயிரிடுபவர்கள், மரங்களில் அதிகம் முட்கள் ஏற்படாவண்ணம் காத்துக் கொள்வதுண்டு. இதுபற்றியே, ஆடுகள் தின்று கழித்த விதைகளினின்று உண்டாகும் மரங்களில் முட்கள் அதிகமுண்டாகாவென்ற கருத்துக்கொண்டு அவ்விதைகளையே ஜனங்கள் நாடுவது வழக்கம்.

வேலன்மரங்களில் கறையான்கள்சுலபமாய்ப் பிடிக்கக்கூடியதென்று சொல்லப்படுகின்றது. இக்காரணம்பற்றியே, இம்மரங்களில் கீல்கள் பூசியும், வேறு ஜாக்கிரதைகள் செய்தும் வருகின்றார்கள்.

## முடிவு.

வேலமரத்தின் கிளைகள் முதலியன ஜனங்களுக்கு உயர்ந்த விறகாக உபயோகப்படுகின்றன. செங்கல்கள், ஓடுகள் முதலியன சூளை போடுவதற்கும் இம்மரத்தையே அதிகமாக ஜனங்கள் உபயோகிக்கின்றார்கள். செழுமையாய் வளர்ந்த வேலமரமானது கடைசியில் நல்ல விலை போகின்றது. ஆராய்ந்து பார்ப்போமானால், விசேஷமாய் இம்மரமானது குடியானவர்களுக்கு நல்ல லாபத்தைக் கொடுக்கக் கூடியதாகவே யிருக்கிறதென்று புலப்படும்.

---

# Topics from Periodicals.

# பத்திரிகை ஆராய்ச்சி.

### அசையும் சித்திரங்களைக் காண்பது கண்களுக்குக் கெடுதியா?

ஸமீபத்தில் வெளியான "வைத்திய கலாநிதி" சஞ்சிகையொன்றில் ஒரு நிருபர், அசையும் சித்திரங்களைக் காண்பது கண்களுக்குக் கெடுதி செய்யக்கூடியதாவென்னும் விஷயமாய் ஓர் வியாசம் எழுதியிருக்கிறார். அதை இங்குக் குறிப்பிடுகிறோம்.

மூளை-நரம்பு மண்டலங்களுடைய நிலைமையும் கண்

களும் அனுகூலமான ஸ்திதியில் இருக்கும்வரையில் அசையும் சித்திரங்கள் (பயாஸ்கோப் படங்கள்) நெடு நேரம் எழுத்துக்களைப் பார்த்துப் படிப்பதனாலுண்டாவதைப்போல அவ்வளவு அதிகமான மழுக்கத்தைக் கண்களுக்கு உண்டாக்குவதில்லை. அசையும் சித்திரக் காட்சிகளை அடிக்கடி பார்த்து வருபவர் சிலர் அக்காட்சி கண்பார்வையைக் குறைத்துவிடுவதாகக் குறை கூறுகிறார்கள்; ஆனால், அவர்களுக்கு ஏற்கெனவே நேத்திரங்களில் ஏதேனும் கோளாறு ஏற்பட்டிருப்பதாய் அனுபவத்தில் தெரிந்துகொண்டிருக்கிறோம். கண்கள் சரியான நிலைமையிலிருக்கையில் அசையும் சித்திரங்களைப் பார்த்துவிட்டு மீண்டும் இதர உருவங்களைக் கண்கள் மழுக்கமின்றி அல்லது கலக்கமின்றி நன்றாய் உற்றுநோக்கும் சக்தியுடையவைகளாயிருக்கும். கண்களின் அமைப்பில் எவ்விதக் கோளாறும் ஏற்படாமலிருக்கையில் அம்மனிதன் ஒருவாரத்தில் நாலைந்து முறை இக்காட்சியை நெடுநேரம் (ஒவ்வொரு தடவையிலும் நான்குமணி அவகாசம் வீதம்) பார்த்துவந்தாலும், அவன்தன் கண்களில் எக்கெடுதியும் ஏற்படாமல் சுகமாயிருக்கக்கூடும். ஆகவே, ஆரோக்கிய நிலைமையிலுள்ள கண்களையுடையவன் அசையும் சித்திரங்களைக் காண்பதில் நேத்திரம் கோளாறடையுமென்பதற்கு அஞ்சவேண்டியதில்லை.

எவருக்குக் கண்களின் ஆரோக்கிய நிலைமை ஏற்கெனவே ஒருவாறு சீர்குலைந்திருக்கின்றதோ, அவர்கள் அசையும்சித்திரங்களைக் காண்பதனால் கண்பார்வை மிகவும் மந்தப்படும்; தொடர்ந்தாற்போல் அக்காட்சியைப்பார்த்து வருவதனாலே அவர்களுக்குக் கண்களில் விகாரமும் கெடுதியும் அதிகப்படும். அத்தகையோர் நெடுநேரம் சித்திரத்தையே உற்று நோக்கி வருவதனால் நேத்திரப் பார்வை மிகவும் மந்தமாகப்போய், கண்களில் அவக்குறிகள் அதிகரித்து விடுவதாகவும் கண்டிருக்கின்றோம். இவ்விதச் சித்திரங்களையேயல்ல—ஆனால் எப்பொருளையுமே வெகுநேரம் அசைவின்றி உற்று நோக்குவது நேத்திரபலம் குன்றியவர்க்கு ஆகாது; ஆனால், அவர்கள் சித்திரங்களையும் வேறு விஷயங்களையும் மாற்றி மாற்றிக் கண்ணோக்கி வருவது அனுகூலமாயிருக்கும்; ஐந்து நிமிஷத்துக்கு ஒரு முறை இரண்டுநொடி நேரமேனும் வேற்று உருவங்களை மாற்றி மாற்றிப் பார்த்துவருவதனால் திருஷ்டியின் கூர்மை மழுங்காமலிருக்கும். இடையிடையே கண்களைச் சற்று மூடிக்கொள்வது நலம்.

ஒவ்வொரு மனிதனுக்கும் அவனவனது கண்பார்வைக்குள்ள சக்திக்கு ஒவ்வொரு விதமான பரிமிதி பிரத்தியேகமாய் உண்டு. ஓர் அசையும் சித்திரத்தைப் பார்த்துக்கொண்டேயிருக்கையில் தோற்றம் மந்தப்படுமானால் (அல்லது விகாரப்படுமானால்), அப்பொழுது கண்களில் ஏதோ கோளாறு ஏற்கெனவே ஏற்பட்டிருப்பதாய்த் தெரிந்துகொள்ளலாம். அப்படிக்கில்லையேல் சித்திரத்தில் ஏதோ வித்தியாசம் அமைந்திருக்கவேண்டும்.

அசையும் சித்திரத்தை நீடித்த நேரம் இடைவிடாது பார்த்துக்கொண்டிருக்கும் ஒருவன் கண்களில் எவ்வித ஸௌகரியக் குறைவும் ஏற்படாமலே அவ்விஷயத்தைக் கவனித்து வருவானானால், அவனுடைய கண் மிகவும் நல்ல ஆரோக்கிய நிலைமையில் இருப்பதாகக் கருதலாம். நாம் விசேஷமாய் இக்காட்சிகளை வழக்கமாகக்கண்டுவரும் நபர்களைக் குறிப்பிட்டு விசாரித்து வந்ததில், அசையும் சித்திரங்களைப் பார்த்தால் எவருக்கும் தீங்கு நிரந்தரமாக ஸம்பவித்துவிட்டதென்று தெரியவில்லை.

இக்காலத்தில் அசையும் சித்திரங்களுடைய காட்சியோ உலகமெல்லாம் மிகுதியாய் வியாபித்து விட்டது. இக்காட்சியினாலுண்டான நன்மை தீமைகளை ஒருவாறேனும் தெரிந்துகொள்வது முடியாத காரியமன்று. உண்மையைக் கவனிப்போமானாலும், இப்பொழுது உலகில் தினந்தோறும் ஒருகோடி ஜனங்களுக்குக் குறையாமல் இக்காட்சியைப் பார்த்துக் களித்து வருகின்றார்கள். இவர்களுள் ஒருவராவது அச்சித்திரக்காட்சியைப் பார்த்ததனால் இன்னவிதமான தீமை ஸம்பவித்ததென்று குறிப்பிட்டுக் குறை கூறவில்லை. கண்பார்வையில் குறிப்பிட்ட கோளாறு எதுவும் அதனால் நேர்ந்ததாக நேத்திர ரோக நிபுணர்களும் விளம்பரப்படுத்தவில்லை கண்பார்வையில் ஏற்கெனவே கோளாறுள்ளவர்களுக்குச் சிறிய சூரிய வெளிச்சமும் ஸௌகரியக் குறைவை உண்டு பண்ணுவதுபோலவே, சித்திரக் காட்சியும் ஏதேனும் கஷ்டமுண்டுபண்ணுமானால், அது நேத்திரத்தின் குற்றமேயன்றிக் காட்சியின் குற்றமன்று.

---

## பொதினா.

பொதினாச் செடியைச் சிலர் புதினாவென்று கூறுகிறார்கள் இது உற்பத்தியாகும் விதம் ஆச்சரியமாகவேயிருக்கின்றது. அதன் இலை மிகவும் உபயோகமானது. ஆகவே, எல்லோரும் இதை உணவோடு சேர்த்து உபயோகிக்கிறார்கள். "ஜனாபிமானி" யில் ஒரு நிருபர் இச்செடியைப்பற்றி ஒரு வியாசம் எழுதியுள்ளார். இச்செடியின் உபயோக விஷயமாய் அவர் குறிப்பிட்டுள்ள சில முக்கிய அம்சங்களை இங்கு எழுதுவோம்.

இந்த இலையை அதிகமாகக் கொண்டாடுகிறவர்கள் மகம்மதியர்களே. நாள்தோறும் அவர்கள் தங்கள் உணவுடன் இதைச்சேர்த்து உட்கொள்ளுகிறார்கள். மகம்மதியர் கிச்சிலிச்சோறு பக்குவம் செய்யும்போது இதன் இலையை அதிகமாக உபயோகிக்கிறார்கள்.

இதை உண்பதனால் ஜனங்கள் அடையும் நன்மைகள் பல. இது தேக ஆரோக்கியத்துக்கு இன்றியமையாதது. வைத்தியத்தில் இது சிரேஷ்டமாகக் கொண்டாடப்படுகின்றது. வாயரோசிகம், காய்ச்சல், பித்த அரோசிகம் முதலியவைகளுக்கு பொதினா சிறந்த மருந்தாக உபயோகப்படுகிறது. இதன் இலையை உபயோகிப்பதனால் ரத்த விருத்தியும், பித்த சாந்தியும், ஜீர்ணசக்தி முதலான குணங்களும் உண்டாகின்றன. ஆகையால், ஐரோப்பியர்கள் இதை அதிகமாக உபயோகிக்கிறார்கள். ஸுலபத்தில் ஜீர்ணமாகாத மாம்ஸம் முதலிய உணவுகளை இந்த இலை அதிக சீக்கிரத்தில் ஜீர்ணிக்கச் செய்கிறது.

ஹிந்துக்கள் இந்த இலையை நெய்யில் வதக்கி உப்பு, புளி, இஞ்சி, மிளகாய், கருவேப்பிலை முதலியவைகளைச் சேர்த்து அரைத்துப் பித்த சாந்தியும் ஜீர்ண சக்தியும் உண்டாவதற்கு உணவுடன் கலந்து சாப்பிடுகிறார்கள். வைத்தியர்கள் இந்த இலையைப் பிழிந்து சாறெடுத்து, வைத்திய முறைக்கேற்ற சில சாக்குக்களைச் சேர்த்து, க்ருதம் (நெய்) செய்கிறார்கள். இந்த நெய் வியாதிஸ்தர்களுக்கு மிகவும் உபயோகப்படுகின்றது. இதைச் சாப்பிடுகிறவர்கள் மனஸ்ஸந்துஷ்டியுள்ளவர்களாயும், திடகாத்திரர்களாயும், ஆரோக்கியமுள்ளவர்களாயுமிருக்கிறார்கள்.

ஐரோப்பியர் இதன் சாற்றை உபயோகித்து, பெப்பர்மிண்டு என்னும் மிட்டாய் செய்து ஜனங்களுக்குப் பயன்படும்படி விற்கிறார்கள். இந்த இலையின் சாற்றை ஜலரூபமான பெப்பர்மிண்டு மிக்சர் ஆகச்செய்து, பித்தசாந்திக்கும் மற்ற வியாதிபரிகாரத்துக்கும் உபயோகிக்க வைத்தியசாலையில் வைத்திருக்கிறார்கள்.

## புகையிலையினால் வருங் கேடு.

புகையிலைச் சுருட்டு உபயோகிப்பதனால் அநேக விதமான தீங்குகள் விளையுமென்பதில் யாதொரு ஸந்தேகமுமில்லை. புகையிலையைச் சுருட்டாகவோ, வேறுவிதமாகவோ உபயோகித்துவருபவர் பலமான வேலை செய்யும்போதும், மல்யுத்தம் முதலிய விளையாட்டுவேலைகள் செய்யும்போதும் இருதயம் பலவீனப்பட்டு, அவர்கட்குச் சிலசமயம் மயக்கம் அல்லது மூர்ச்சையுண்டாகும். எவ்வளவு பலிஷ்டர்களானாலும், புகையிலையை உபயோகித்து வந்தார்களானால், அவர்களுடைய சத்வம் ஒடுங்கிப் பார்வைக்கு மட்டும் ஒழுங்கான மனிதர்களாய்த் தோற்றுவார்கள். அதிலும் சிறுபிள்ளைகள் இக்கெட்ட வழக்கத்தினால் பெருத்த தீங்குக்கு உள்ளாகிறார்கள். புகையிலையை உபயோகிக்காத வாலிபர்களும் சிறுவர்களும் ஓடியாடியுழைத்துவருவதுபோல் புகையிலையை உபயோகிப்பவர்கள் ஓடியாட முடியாது. பந்தய விளையாட்டுக்களில் இவர்கள் புகையிலைப் பழக்கமில்லாதவருடன் போட்டிபோட்டுக்கொண்டு விளையாடி, இறுதியில் அபாயகரமான தீங்குகட்கு வீணில் ஆளாகிறார்கள். இவர்களுக்கு ஜீர்ணசக்தியும் சீரழியும். இவர்களுடைய இருதய நடையும் அவ்வாறு வேலை செய்யும்போது வெகு விரைவாகப் படபடத்து ஓடித் திடீரென்று இறுதியில் நின்றுவிடவுங் கூடும். இதனை உபயோகிப்பவருடைய மூளையும், நரம்புமண்டலங்களும் தளர்ச்சியடையும். ஞாபக சக்தியும் குன்றிப் போகும். இவருடைய சரீரம் எவ்வித ரோகத்திற்கும் காலக்கிரமத்தில் இடங்கொடுத்து உடலைச் சீர் கெடுத்துவிடும். தசைநார்களுக்கு உள்ள வலிமையைக் குறைத்துவிடும். புகையிலையை உபயோகிக்கும் வாலிபரிடம் இவ்விஷயங்களை எடுத்துரைத்தாலும், அவர்களால் அவ்வழக்கம் நிறுத்த முடியாததாக இருக்கின்றது. சிறுகச்சிறுக அவ்வழக்கத்தைக் குறைத்துக்கொண்டு வருவது நலமாகும். உபாத்தியாயர்களும் மாணவர்களிடம் இந்தத் துராப்பியாசத்தைக் காணும்போது கண்டித்தும் தண்டித்தும் விலக்குவது நலமாகும். பெற்றோரும் புத்திரர்களிடம் கவனம் செலுத்தி இந்தக் கெட்ட வழக்கத்தை அவரிடத்தினின்று நீக்கிவிடுதல் நலமாகும்.—வித்தியாபாநு.

## Books and Reviews.

## புஸ்தகங்களும், விமர்சனங்களும்.

### புஸ்தக வரவு.

நாகரிகம்?: சென்னை சே. மு. ராஜு செட்டியார் அவர்களால் இயற்றப்பட்டது. விலை ரூ. 2.

நடராஜன் நாடகம் சென்ற வைபவம்: ச. தா. மூர்த்தி முதலியார் அவர்களால் வெளியிடப் பெற்றது. விலை அணா 8.

மெல்லியலார் சுதந்திரம்: காஞ்சீபுரம்-வாசுதேவ ஐயர் எழுதியது. விலை அணா 6.

மேற்கண்ட புஸ்தகங்களின் மதிப்புரை அடுத்த பத்திரிகையில் வெளியாகும்.

# The Diamond Ring.

By Mr. S. Narasimhachariar B.A., B.L.

## வைர மோதிரம்.

### 1-ம் அத்தியாயம்.

### ஜமீன்தார்.

ஏறக்குறைய முந்நூறு வருஷங்களுக்கு முன்பு காஞ்சீபுரத்துக்கு மேற்கே நூறுமைல் தூரத்திலுள்ள பனைப்பாளையம் என்னும் ஒரு பெரிய கிராமத்தில், சொக்கநாதர் என்ற பெயருள்ள ஜமீன்தார் ஒருவர் இருந்தார். அவர் சிறந்த பரோபகாரி. பனைப்பாளையமும், அதைச்சுற்றியுள்ள நாற்பது ஐம்பது கிராமங்களும் அவருக்குச் சொந்தமாயிருந்தன. கொஞ்சம் ஸொத்துள்ளவர்கள் அதிகமான ஆஸ்தியையுடையவர்களைக் கண்டு பொறாமைகொள்வதுபோலல்லாமல், இவர் நற்குணமுடையவராய் தெய்வபக்தி மிகுந்துவிளங்கினார். இவர் சிறந்த பரோபகாரியாகையால், தீயசிந்தனைகள் கொஞ்சமும் இன்றி, தமது கீழிருந்த குடியானவர்கள் ஸுகமடைந்து திருப்தியோடு வாழ்ந்தால் அதுவே போதுமானதென்று எண்ணி, அவர்களிடமிருந்து குறைந்த வரிகளையே வாங்கிவந்தார். பணத்தில் இவருக்குப் பேராசை இல்லாததனால், மென்மேலும் இவருடைய செல்வம் பெருகிற்று. தகுந்த காலத்தில் மழைபெய்து வந்தபடியால், பயிர்கள் செவ்வையாய் விளைந்தன. குடிகளும் ஸந்துஷ்டியாயிருந்தார்கள். சிற்சில ஸமயங்களில் மழை காலத்தில் பெய்யாததனாலாவது, வெள்ளப் பெருக்கினாலாவது, ஆறு ஏரி முதலியன கரைபெருகி நிலங்களைப் பாழாக்கினாலாவது நிலங்கள் பலன்தராவிட்டால், அவர் அந்த வருஷங்களில் குடிகளிடமிருந்து வரி வாங்குவதில்லை. இத்தகைய நற்குணங்கள் அவரிடம் அமைந்திருந்தபடியினால், குடிகள் அனைவரும் அவரிடத்தில் மிகுந்த அன்பு பாராட்டி, அவரைத் தமது தந்தைபோலக் கௌரவித்து வந்தார்கள்.

அவருடைய நற்குணங்களை மதித்து, கடவுள் அவருக்கு ஸகல பாக்கியங்களையும் தந்ததோடு, புத்திர பாக்கியத்தையும் அளித்திருந்தார். இவருடைய மனைவி காந்திமதியம்மாளும், தமது கணவனுடைய மனதிற்குத்தக்கபடி நடந்துவந்தாள். இவர்கள் தமது ஏகபுத்திரனை அம்பலவாணனிடத்தில் எவ்வளவு அன்புபாராட்டி வந்தார்களோ, அவ்வாறே அப்புத்திரனும் பெற்றோர் சொல் தவறாது நடந்துவந்தான்.

சொக்கநாதருக்கு ஒரு ஸகோதரி இருந்தாள். அவள் இவரைக் காட்டிலும் பதினைந்து பிராயம் பெரியவள். சொக்கநாதருக்கு மூன்று வயதாகுமுன்னரே அவருடைய தாய் காலஞ்சென்றமையால், அவருடைய சகோதரியே அவரை எடுத்து வளர்த்தாள். இக்காரணம் பற்றி அவர் அவளைத் தன்தாயைப்போல் பாவித்துவந்தார். அந்த அம்மாளும் ஒரு பிள்ளையைப்பெற்று, அப்பிள்ளையின் ஆறாம் வயதில் இறந்துபோனாள். மற்றொரு வருஷத்திற்குள் இந்தப் பிள்ளையின் தந்தையும் இறந்துபோனமையால், சொக்கநாதரே, இப்பாலகனை வளர்த்து, தன்பிள்ளை வேறு இக்குழந்தை வேறு என்று எண்ணாமல், இருபிள்ளைகளையும் தம் இருகண்களைப்போலவே பாவித்துவந்தார்.

இப்படி இருக்கும் நாளையில், இருவருக்கும் பதினைந்து வயதாயிற்று. நாளுக்குநாள் அம்பலவாணன் நன்னடத்தையிலும் தெய்வ பக்தியிலும் மிகுந்து கல்வியையும் விரைவில் கற்றுத்தேர்ச்சியடையவே, அனைவரும் அவனைக்கொண்டாடினார்கள். தனது அத்தை மகனான மாசிலாமணியிடத்திலும் அவன் அளவற்ற விசுவாசம் வைத்து, சகோதரன்போலவே அவனைக்கருதி வந்தான். ஆனால், மாசிலாமணிக்கு இவன்மீது பொறாமை உண்டு. வெளிக்கு நல்லவன்போல் நடித்துச் சமயத்தில் ஏமாற்றுவதில் மாசிலாமணி தேர்ச்சிபெற்றிருந்தான். பிறரை வஞ்சிப்பதே இவனுக்குப்பேரானந்தம். அதிலும், அம்பலவாணனிடத்தில் இவனுக்குப் பொறாமை வரவர அதிகமாயிற்று. தனது மாமனுடைய காலம்வரைக்குந்தான் தனக்குச் செல்வாக்கு இருக்குமென்றும், அவர் காலத்திற்குப் பிறகு அம்பலவாணன் தன்னை மதிப்பானோ மதிக்கமாட்டானோ என்றும், தான்மாத்திரம் ஏழையாயிருந்து அம்பலவாணன் கோடீசுவரனாக வாழ்வதை எப்படி கண்டு சகிப்பது என்றும் எண்ணி மாசிலாமணி மனம் புழுங்கினான்; நெடுநாள் யோசனை செய்து, எவ்விதத்திலாவது அம்பலவாணனுக்கும் அவனுடைய தகப்பனாருக்கும் மனஸ்தாபத்தை உண்டாக்கிவிட்டால், அப்போது தன் எண்ணம் நிறைவேறுமென்றும், மாமன் ஸகல ஸொத்துக்களையும் தனக்கே கொடுக்க இசைவார் என்றும் எண்ணினான். எந்த விதமாக இவர்களிருவருக்கும் மனஸ்தாபத்தை மூட்டலாமென்று மாசிலாமணி இரவும் பகலும் சிந்தனைசெய்து வந்தான். இப்படிச் சில வருஷங்கள் கழிந்தன.

எஸ். நரசிம்மாச்சாரியார், பி.ஏ; பி.எல்.

## Education and Science.

## கல்வியும், சாஸ்திரமும்.

### கல்விச் செலவு.

சென்னை இராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளிலும் ஸ்தலஸ்தாபனங்களிலும் கல்விக்காக எவ்வளவு பணம் செலவழிக்கப்பட்டிருக்கின்றனவென்ற கணக்கைக் கவனிப்போம்.

சென்னை இராஜதானியிலுள்ள முனிஸிபாலிடிகளுக்கு 1907-08-ம் வருஷத்தில் மொத்தம் வரும்படி ரூபாய் 62·88 லட்சம். அவை கல்விக்காகச் செலவழித்திருப்பது 4·51 லட்சம் ரூபாய். அதாவது அவைகளின் மொத்த வரும்படியில் 100-க்கு 7·2 வீதம் ஆகின்றது. அதற்கு அடுத்த இரண்டு வருஷங்களில் அவற்றின் கல்விச்செலவானது முறையே 100-க்கு 8·8 வீதமும் 100-க்கு 7 வீதமும் ஆகும். அதன்பிறகு செலவு இன்னும் குறைந்துபோயிற்று. 1914-15-ம் வருஷம் முதல் மூன்று வருஷங்களுக்குக் கல்விச் செலவு வருமாறு.

| வருஷம். | வரும்படி. | கல்விச் செலவு. | விகிதம் நூற்றுக்கு |
|---|---|---|---|
| 1914—15 | 100·31 | 10·90 | 10·8 |
| 1915—16 | 103·05 | 11·29 | 10·9 |
| 1916—17 | 107·84 | 9·54 | 8·8 |

சென்னை இராஜதானியிலுள்ள ஜில்லாபோர்டுகளுக்கு 1907-03-ம் வருஷத்தில் கிடைத்த வருமானம் ரூபாய் 150·70 லட்சம். இதில் கல்விக்காக செலவழிக்கப்பட்ட தொகை 19·89 லட்சம் ரூபாய். இந்தக் கல்விச்செலவானது அவற்றின் மொத்த வரும்படியில் நூற்றுக்கு 13 வீதமாகும். சென்ற 1914—15-ம் வருஷம் முதல் 1916—17-ம் வருஷம் வரையில் கல்விச் செலவின் விவரம் வருமாறு.

| வருஷம். | வரும்படி லட்சம். | கல்விச்செலவு லட்சம் | கல்விச்செலவு 100-க்கு இவ்வளவு. |
|---|---|---|---|
| 1914—15 | 209·95 | 32·90 | 10·9 |
| 1915—16 | 190·95 | 34·20 | 17·8 |
| 1916—17 | 191·64 | 32·97 | 17· |

மேலே குறிப்பிட்ட கணக்கைக் கவனித்தால், சென்ற இரண்டு வருஷங்களில்தான் கல்விச்செலவு அதிகப்பட்டுள்ளதென்பதும், அதற்குமுன்பு குறைந்தேயுள்ளதென்பதும் புலப்படும்.

### அலகாபாத் ஸர்வகலாசாலை.

பிள்ளைகளுக்கு மேற்படிப்புக்கான ஸௌகரியங்கள் பல இருந்தும், காலெஜ்களில் போதுமானவளவு இடமில்லாததனால், அவர்கள் தங்கள் படிப்பை நிறுத்திக்கொள்ளவேண்டியிருக்கின்றது. இக்காரணம்பற்றியே காலெஜ்களை அதிகமாக்க வேண்டுமென்று கவர்ன்மெண்டாரை நாம்கேட்டுக்கொள்வது விஷயம் இப்படியிருக்க, அலகாபாத் ஸர்வகலாசாலையார் அங்குள்ள காலெஜ்களில் படிக்கும் பிள்ளைகளின் ஸங்கியைப் பொதுவாக 45க்கு அதிகப்படக்கூடாதென்றும், தேவையாயின் அறுபதுவரை இருக்கலாமென்றும் ஓர் உத்திரவை வெளியிட்டிருக்கிறார்கள். இத்தகைய உத்திரவு நமது இராஜதானியில் இருப்பதாகத் தெரியவில்லை. காலெஜ் வகுப்புப் பிள்ளைகளுக்கும் கீழ்த்தரப் பள்ளிக்கூடங்களில் படிக்கும் பிள்ளைகளுக்கும் பலமடங்கு வித்தியாசம் உண்டு. காலெஜ் மாணக்கர்கள் வயதுவந்தவர்கள்; தங்கள் பொறுப்பை உணர்ந்தவர்கள். இவர்கள் விஷயமாய் இத்தகையஉத்தரவைப் பிறப்பித்திருப்பது நியாயமான காரியமாகத் தோற்றவில்லை. காலெஜ்கள் அதிகமாக இல்லாத இக்காலத்தில் அவர்கள் இவ்விதம் செய்திருப்பது கண்மூடித்தனமாகும். அலகாபாத் ஸர்வகலாசாலையார் இனியாவது ஆழ்ந்துயோசித்து இந்த உத்தரவை உடனே ரத்து செய்வார்களென நம்புகிறோம்.

### புகையினால் செடிகள் கெடுவது.

தொழிற்சாலைகள் போன்ற இடங்களில் இருக்கும் மரஞ்செடிகளுக்கு அங்கு உண்டாகும் புகையினால் பலவித கெடுதல்கள் சம்பவிக்கின்றன. புகையினால் அவற்றின் வளர்ச்சி குன்றிப்போகின்றது. ஏனெனில், புகையில் கரியும், தாரும். திராவகங்களும் இருக்கின்றன. இவை மரஞ்செடிகளின்மேல்பட்டு அவற்றை அரித்துவிடுகின்றன. செடிகளின்மேல் தார் ஒட்டிக்கொள்வதனால், அவற்றின் உட்புறத்தினின்று நீர் வெளியாக முடிவதில்லை. இன்னும், புகையினால் சூரிய வெளிச்சம் குன்றிப்போகவே இதனால் செடிகளின் வளர்ச்சியும் பாதகமடைகின்றது.

# Agriculture and Co-operation.

## வியவசாயமும், கூட்டுறவும்.

முள்ளங்கி விதை.

முள்ளங்கிவிதை வேண்டுபவர்கள், கிழங்கு பிடுங்கும்போது வேறு ஒரு இடத்தில் குழிதோண்டி எரு விட்டு, ஒரு கிழங்கை இலையுடன் பிடுங்கி அக்குழியில் வைத்துத் தண்ணீர் பாய்ச்சிவரவேண்டும். பிறகு செடியானது வளர்ந்து புஷ்பித்துக் காய்க்க ஆரம்பிக்கும். காய் நன்றாக முதிர்ந்ததும், நல்லதாய்ப் பொறுக்கி எடுத்துக்கொண்டு, நிழலில் காயவைத்து விதைகளைச் சேகரித்துக் கொள்ளவேண்டும்.

உரங்களின் வேலை.

உரங்களில் உள்ள முக்கிய பாகங்களாகிய பொடாஷ், நைட்ரொஜின், பாஸ்பாரிக் ஆஸிட், சுண்ணாம்பு ஆகிய இந்த நான்கும் செடிக்குப் பல விதங்களில் உதவியாயிருக்கின்றன. பொட்டாஷ் ஸத்தானது செடியின் இளம் இலைகளிலும் இளங் கொம்புகளிலும் ஏராளமாயிருக்கிறது. இது இலையில் "ஸ்டார்ச்" என்னும் மாஸத்து, சர்க்கரை முதலிய பொருள்கள் உண்டாவதற்கு ஸாதகமாயிருக்கிறது. காய்கள் காய்க்கும்போது மாஸத்தும், சர்க்கரையும் இலையிலிருந்து காய்க்கும் பழத்துக்கும் போய்ச் சேருவதற்கு உதவியாயிருக்கிறது. இந்த இரண்டு வேலையும் முடிந்த பிறகு பொடாஷில் ஒரு பாகம் மறுபடியும் பூமிக்குப் போய்விடுகிறது.

நைட்ரொஜின் இலையும் தண்டும் வளருவதற்கு ஸாதகமாயிருக்கிறது. இது மொட்டுகளும், புஷ்பங்களும் வளருவதற்குத் தடையாயிருக்கிறது. செடிக்கு நைட்ரொஜின் ஸம்பந்தமான எருக்களிட்டால் செடி மிகவும் நன்றாய் வளரும். இதனால் செடியில் உள்ள நைட்ரொஜின் அதிகமாவதோடு, காய்கள் முதலியவைகளில் ப்ரொடீன் என்னும் (மாம்ஸம் வளருவதற்கேற்ற) பொருள் அதிகமாவதற்கும் இடமேற்படும்.

பாஸ்பாரிக் ஆஸிட்டானது செடிகள் காய்காய்ப்பதற்கு உதவியாக இருக்கிறது. பாஸ்பேட்டுகள் என்னும் பாஸ்பாரிக் ஆஸிட் சம்பந்தமான செடிஉணவுகள் பொதுவாய் விதைகளில் தான் அதிகம். பாஸ்பேட்டுகள் வேண்டிய அளவு பூமியில் இல்லாவிட்டால் செடியில் விதைகள் உண்டாகமாட்டா.

நிலத்தில் சுண்ணாம்பு இருந்தால் இந்திரிய வஸ்துக்கள் அழுகி மாறுபாடடையும். செடிக்கு உணவாக முடியாத ஸ்திதியிலிருக்கும் எருப்பொருள்களை உணவாகக்கூடிய ஸ்திதிக்கு மாற்றிவிடும். இது முக்கியமாய் நிலத்திலுள்ள மண்ணின் தன்மையை விருத்தி செய்ய உதவுகிறது. முக்கியமாய் இறுகின களியான நிலங்களை பொலபொலப்பாக்கவும் மணற்பாங்கான நிலங்களைக் கெட்டிப்படுத்தவும் உதவுகிறது. மேலும், நிலத்தில் இந்திரிய வஸ்துக்கள் அழுகுவதனால் உண்டாகும் புளிப்புத் தன்மையையும் அது போக்கிவிடும்.

—ஜநாபிமானி.

எலுமிச்சை சாகுபடி.

எலுமிச்சை சாகுபடி விஷயமாய் நாம் கவனிக்க வேண்டிய விஷயங்களென்னவெனில்:—(1) செடிகளை ஒருபோதும் ஆழமாய் நடக்கூடாது. (2) செடிகள் ஒவ்வொன்றிற்கும் போதுமானவளவு இடைவெளி இருக்கவேண்டும். (3) வைத்த செடிகளை மிகவும் ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளவேண்டும்; எவ்வளவு பார்க்க முடியுமோ அவ்வளவே நடுவது நல்லது.

தென்னந் தோப்புகள்.

தென்னந் தோப்புகளில் இளம்பிள்ளைகளாயுள்ள செடிகளைச்சுற்றிக் குப்பைகளையும் செத்தைகளையும் போட்டுவைத்தால், அவை நன்றாய் வளருமாம்.

# Industry and Commerce.

# கைத்தொழிலும், வியாபாரமும்.

## பருத்திக்கோட்டை மாவு.

மேனுடுகளில் பருத்திக்கொட்டை பிண்ணாக்கு மாவை கோதுமை மாவுக்குப்பதிலாக உபயோகப்படுத்தும் விஷயமாய்ச் சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வந்தன. அமெரிக்காவில் டெக்ஸாஸ் யூனிவர்ஸிடியார் இவ்விஷயமாய்ப் பரிசீலனை செய்து வந்தார்கள். $3\frac{1}{2}$ அவுன்ஸ் பருத்திக்கொட்டை மாவோடு அரிசி மாவு, வெண்ணெய், சர்க்கரை, திராக்ஷிரஸம் ஆகிய இவைகளைக் கலந்து ரொட்டிசெய்து சில பேர்களுக்குக் கொடுத்துவந்ததில், 100-க்கு 85 பாகம் ஜீர்ணிக்கப்பட்டு வந்ததுடன், அவர்களின் தேகத்தில் அசதி காணப்படவில்லை. இதனால், சரீரக்கட்டுக்குத் தேவையான பொருள்கள் பருத்திக்கொட்டையில் இருக்கின்றதெனத் தெரிகின்றது.

## கவனிக்கவேண்டிய சில வியாபாரக் குறிப்புக்கள்.

பாங்கியில் பற்றுவரவு செய்ய எண்ணுவதை யோசித்துச்செய். பாங்கியில் கடன் வாங்கினால், அதைச் சீக்கிரத்தில் கொடுத்துவிடு.

அவசியம் தேவையான மூலதனத்துடன் நீ உன் தொழிலை ஆரம்பஞ்செய். வியாபாரத்திற்கு வேண்டிய சாக்குக்களுக்கு மூன்று மடங்கு அதிகப்பணம் கையில் இருக்கவேண்டியது அவசியம்.

ஒரு தொழிலில் புழங்கிவரும் பணத்தை எடுத்து வேறு தொழிலில் போட்டுவிடாதே. வேறு தொழிலைப்பற்றி நீ அதிகமாய் யோசனைசெய்து பணம் போடுவதாய் எண்ணினாலும், உன்னுடைய பழைய தொழிலை நிராகரிக்கும் குற்றத்திற்குள்ளாவாய்.

நடைபெற்றுவரும் தொழிலுக்கு இருந்துவரும் பணம் அதிகமென்றும், அவ்வளவு தேவையில்லை என்றும் உனக்கு நிச்சயமாய்த் தெரிந்தாலொழிய அத்தொழிலின் பணத்தை எடுக்காதே.

உனது பற்றுவரவு ஆசாமிகளுக்குக் கேட்பதற்கு மேல் சாக்குக்கொடுத்துக் கடனை அதிகப்படுத்தாதே. ஏனெனில் சிறிதுகாலம் வரையில் கடன் கொடுத்து வந்து, பிறகு உனக்கிருக்கும் கஷ்டத்தினால் இனி கடன் கொடுக்கமுடியாதென்று மறுத்தால், நீ ஏதோ அவநம்பிக்கைப்படுவதாய் அவன் எண்ணுவான். இந்த அபிப்பிராயத்துக்கு நீ இடங்கொடுக்காதே. உனக்குச் சரக்குக்கொடுத்துவரும் ஆசாமியின் பணத்தை அதிகநாள் உன்னிடம் வைத்துக்கொள்ளாதே. அவர்கள் உனக்கு அதிக தவணை கொடுப்பது உனக்குச் சிரமத்தையே கொடுக்கும்.

சிறிது நாளைக்குப் பணம் வேண்டியிருந்தால் பாங்கியில் கடன் வாங்கிக்கொள். பாங்கியுடன் பற்றுவரவு வைத்துக்கொள்வது உனக்குச் சௌகரியத்தைக் கொடுக்கக்கூடும்.

உனது தொழில்களை ஒவ்வொன்றாய்த் தனித்தனியே செய்துகொண்டுவா. உன்னிடத்தில் சும்மாவிருக்கும் பணத்தைக்கொண்டு ஒவ்வொரு பிரிவையும் தனித்தனியே பலப்படுத்த முயலு—வர்த்தக மித்திரன்.

## கூட்டுறவும், கைத்தொழில் அபிவிருத்தியும்.

இப்போது நமது தேசத்தில் நாணயச் சங்கங்கள் அதிகமாயிருக்கின்றனவேயொழிய, கைத்தொழில் வியவஸாயம் முதலியனவற்றை அபிவிருத்தி செய்யப் போதுமான கூட்டுறவுச் சங்கங்கள் இல்லை. இவற்றில் தொழிலாளர்களுக்குத் தேவையான ஸங்கங்களைப்பற்றியே இங்குக் கவனிப்போம். தொழிலாளர்களுக்காக ஏற்படுத்தக்கூடிய ஸங்கங்களை இரண்டுவிதமாய்ப் பிரிக்கலாம். முதலாவது : தொழிலாளிகள் தங்கள் வீடுகளிலேயே வேலைசெய்துகொண்டு தங்களுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக்கொள்வது, செய்த பொருள்களை விற்பது. இரண்டாவது : பல தொழிலாளிகள் ஒன்றா சேர்ந்து ஒரு சிறு தொழிற்சாலையை ஏற்படுத்திக்கொண்டு வேலைசெய்து லாபத்தைப் பங்கிட்டுக்கொள்வது. முதலாவதாகக் கூறிய தொழிலாளிகள் தங்கள் ஒழிவு நோங்களில் தொழிற்சாலைகளின் போட்டியால் நஷ்டமேற்படாத தொழில்களைத் தம் வீடுகளிலேயே செய்து ஸங்கங்களின் மூலமாய் விற்பார்கள். கைத்தொழிலுக்குத் தேவையான பொருள்களை சங்கங்களின் மூலமாகவே தருவித்துக் கொள்வார்கள். மேனுடுகள் சிலவற்றுள் வியவசாயிகள் தங்கள் தங்கள் ஒழிவு நோங்களில் பொம்மைகள் முதலியனசெய்து ஸங்கங்களின்மூலமாய் விற்பனைசெய்து வருகிறார்கள். இரண்டாவதாகக் கூறிய சங்கம் இப்போது நமது தேசத்தில் ஏற்படக்கூடியதன்று. போதுமான உதவியிருக்குமாயின், நாளாவட்டத்தில் இங்கினமைக்குவாலாம். ஆகவே, இராஜாங்கத்தாரும் பொதுஜனங்களும் தொழிலாளிகளின் முன்னேற்றத்திற்காக உழைத்துவருவது அவசியமாகும்.

## Sanitation and Medicine.
## சுகாதாரமும், வைத்தியமும்.

### மிளகின் உபயோகங்கள்.

இது தென்னிந்தியாவில் மலபார், கொச்சின், குடகு மைசூர் முதலான மலைநாடுகளில் பயிராகின்றது. நல்ல மிளகானது காரமுள்ளதாயும் பளுவாயுமிருக்கும். இது ஜீர்ணத்தையுண்டாக்கும். இருமல், ஜலதோஷம், வாந்திபேதி, பாண்டு, குன்மம், காதடைப்பு முதலானவற்றை இது போக்கடிக்கும். அதிகமாக இதை உபயோகிப்போமானால் உடம்பு எரிச்சல் தாகம் முதலியன உண்டாகும்.

### வெங்காயத்தின் ஔஷதத் தன்மைகள்.

வெங்காயம் நாக்கில் அரோசகத்தைப் போக்கி பசியை உத்தீபனம் செய்யுமென்றும், கபப்பிரகோபத்தினால் உண்டாகிற மார்சளியையும், வாத விகாரங்களை நிவிருத்திக்கக்கூடியதென்றும், குன்மத்தை நிவாரணம் செய்யத் தகுந்ததென்றும் ராஜநிகண்டிலும், தன்வந்தரி நிகண்டிலும் கூறப்பட்டுள்ளது.

சாஸ்திராராய்ச்சி செய்து பார்த்த பரிசோதனை செய்யும் இக்காலத்து நிபுணர்கள் வெங்காயத்தை உணவுச்சத்து நிறைந்த சிறந்ததோர் சாக்காகக் கருத ஆரம்பித்திருக்கிறார்கள். சாகவர்க்கங்களில் இது சிரேஷ்டமானதென்றும், போஷணைக்குரிய தாக்கியகரச் சத்துக்களும், சரீரத்தில் வன்மை உண்டாக்கக்கூடிய உப்புவகைகளும் இதில் அடங்கியிருக்கின்றனவென்றும் சாஸ்திர பரிசோதகர்கள் கண்டுபிடித்திருக்கிறார்கள். பிரான்ஸ் தேசத்தில் துருப்புக்களுக்கு வெங்காயம் விசேஷமாய் உணவாகக் கொடுக்கப்பட்டுவருகிறது. மார்சளி அல்லது ஜலதோஷத்தை நிவிருத்தி செய்ய இச்சாக்கு உபயோகிக்கப்படுறது. சமைத்த வெங்காயம் மலச்சிக்கலைப் போக்கவும், குடல் முதலியவற்றிலுண்டாகும் அழற்சியைப்பரிஹரிக்கவும் தகுந்தாயிருக்கின்றது. நித்திரையின்மையினால் வருந்துபவருக்கு வெங்காயத்தை அடிக்கடியும் உபயோகிக்க, காலத்தில் நித்திரையுண்டாகும். ஆமவாதம் என்கிற கீல்வாயுவில் இதை புஜித்தும், வீக்கமுள்ள விடங்களில் பொட்டலிகையாக (போல்டிஸாகஸ்) கட்டியும் நல்ல பலன் கண்டதுண்டு. நாட்பட்ட மார்சளியையும் மாரடைப்பையும் தணிப்பதில் வெங்காயப் பொட்டலிகைக்குச் சமானமானது மற்றொன்றில்லை. வெங்காயம் எளிதில் ஜீர்ணமாகிறது. தாதுக்களை நன்கு போஷிக்கின்றது. பசியை உத்தீபனம் செய்கிறது. நரம்பு மண்டலத்தைக் குளிரச்செய்கிறது. மிருதுவாக மலத்தையும் மூத்திரத்தையும் வெளிப்படுத்துகிறது. வெங்காயத்தில் கந்தகச்சத்தும் வேறு சில உப்புச் சத்துக்களும் அடங்கியிருப்பதனால், குடலில் தோஷஹாரமாகவும் (antiseptic) வேலை செய்கிறது.—வைத்திய கலாநிதி.

## General Notes.
## பொதுக் குறிப்புக்கள்.

### காகிதத்தினால் பால் புட்டிகள்.

காகிதத்தினால் பால்அடைத்துவைக்கக்கூடிய புட்டிகளைச்செய்யவும், அவற்றை மணியொன்றுக்கு ஐயாயிரம் வீதம் தயார் செய்யவும் ஓர் நூதன இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றதாம். இதன் நீளம் 90 அடி என்றும், விலை மூவ்வாயிரம் ரூபாய் என்றும் சொல்லப்படுகிறது. இப்புட்டிகளை மரத்தினின்று எடுக்கப்பட்ட காகிதக் கூழினாலேயே இந்த இயந்திரத்தைக்கொண்டு செய்துவிடலாமாம். ஒருடன் கூழினால் 60 ஆயிரம் புட்டிகள் செய்யக்கூடுமென்றும், இயந்திரத்தை ஓட்ட மூவர் இருந்தால் போதுமென்றும், இப்புட்டிகள் கண்ணாடி புட்டிகளைவிட விலை ஸரசமாயும் கெட்டியாயுமிருக்கின்றனவென்றும் ஓர் பத்திரிகை கூறுகின்றது.

### ஓர் பத்திரிகாசிரியர்.

அமெரிக்காவில் பிரிஸ்பேன் என்ற ஓர் பத்திரிகாசிரியர் இருக்கிறார். அவருடைய பத்திரிகைக்கு 20 லட்சம் பேர் சந்தாதார்கள் இருக்கின்றார்களாம். அவர் அமெரிக்கப் பிரெஸிடெண்ட் வில்சனைவிட அதிகச் சம்பளம் வாங்குகிறாரெனச் சொல்லப்படுகின்றது.

### தோலுக்கு மெருகு செய்தல்.

பூட்ஸ்கள், குதிரை சேணங்கள் முதலிய தோல் சாமான்களைச் சுத்திசெய்யக் கீழ்கண்ட கலப்பை உபயோகிக்கலாம்:—இரண்டு பயிண்டு காடியில் ஒரு பயிண்டு ஆறின தண்ணீரைக் கலந்துகொண்டு, அதோடு பிசின்பொடி ½ பவுண்டு, செம்மரத்தூள் ½ பவுண்டு, அவுரிச்சாயப்பொடி ¼ அவுன்ஸ் நல்ல ஸோப் ¼ அவுன்ஸ் ஆகிய இவைகளைக் கலந்து கால் மணிநேரம் கொதிக்கவைத்து, பிறகு தண்ணீரை நீத்துவிட்டு சூட்டோடு ஒரு கண்ணாடி டப்பியில் போட்டுவைத்துக்கொள்ளவேண்டும்; சூடு ஆறினதும் உபயோகிக்கத் தகுந்ததாகும்.

### தேனைப் பரீக்ஷித்தல்.

தேன் சுயமானதாவென்பதைக் கீழ்க்கண்ட முறைகளினால் கண்டுபிடிக்கலாம்:—ஒரு பருத்தித்திரியைத் தேனில் தோய்த்து எற்றவேண்டும். தேன் சுயமானதாயிருந்தால் அது எரியும்; இல்லாவிடில் எரியாது. நல்ல தேனைச் சுண்டவைத்தால், அடியில் கசண்டு நிற்காது. சுயமான தேனைக் காகிதத்தில் விட்டால், காகிதம் ஊறாது.

### கைப்பிடி ஒட்டவைக்க.

அடிக்கடி கைப்பிடிகளும், குடைக்காம்புகளும் கழன்றுபோகின்றன. அவற்றைக் கெட்டியாயிருக்கும்படி செய்ய: ரோசனம் கொஞ்சம் பொடிசெய்து ஒரு கரண்டியில் வைத்து நெருப்புக்கு நேராகப்பிடிக்கவும். ரோசனம் உருகியதும் அதை கைப்பிடி துளையில் விட்டு நிரப்பி சூடு தணியும்வரை அசையாமல் சொருகி வைத்திருக்கவேண்டும்.